RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 21 ஒக்டோபர் 2022 இதழ்:- 26

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## 23 ஒக்டோபர் 2022 இவர்களுக்காக வாருங்கள்!




விபரங்களுக்கு 10ம் 11ம் பக்கம் பார்க்க

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## சரணடைந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் இராணுவம் - பொலிசாரிடம் இதுவரை விசாரணை இல்லை

### ஆணைக்குழுக்களால் பயனில்லை - முன்னாள் பாதுகாப்பு செயலர்



பாதுகாப்புப் படையினரிடம் சரணடை ந்த மற்றும் கைது செய்யப்பட்டதன் பின்னர் இடம் பெற்றிருக்கும் காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும், குற்றமிழைத்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைத் தண்டிக்குமாறும் கடந்த கால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இன்று வரை முப்படைகளைச் சேர்ந்த எத்தனை பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்? எத்தனை பேர் தண்டிக் கப்பட்டிருக்கின்றார்கள்? என்று நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார். (8ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## தேர்தலுக்கு அஞ்சும் ரணில்?

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களைப் பின்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சூட்சுமமான உபாயமொன்றை முன்னெடுத்ததையடுத்து எதிர்க்கட்சிகள் அனைத்துமே உஷாரடைந்திருக்கின்றன. குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தலை நடத்தவில்லையென்றால் போராட்டக்களத்தில் (9ம் பக்கம் பார்க்க)

BUY/SELL HOUSES
HOMELIFE Higher Standards
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
RE/MAX ROYAL PROPERTIES
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
MORTGAGE ALLIANCE


BUYING OR SELLING OR LEASE !
Residential or Commercial
Team SIVA WILL BRING THE BEST RESULTS!
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
18 Years Real Estate Experience
HOMELIFE
HIGHER STANDARDS
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence / Morningside
Scarborough $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route
Sheppard / Markham
Scarborough $449,900
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space
Sheppard & Warden
Scarborough $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony
401 & Mccowan
Mississauga $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance
Warden & St Clair
Scarborough $629,000
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo
Markham & Eglinton
Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances
John W Taylor / Ferris Lane
New Tecumseth $839,000
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors
Simcoe & Ritson
Oshawa $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors
Altona / Finch
Pickering $979,000
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage
Harmony & Taunton
Oshawa $1,224,888
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop
Donald Cousens & Hwy 7
Markham $1,488,888
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings
Hwy 48/Castlemore
FOR LEASE
Markham $3,600
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station
Hwy 7/Donald Cousens
FOR LEASE
Markham $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft
Church / Rossland
FOR LEASE
Ajax $3,175
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood
Edenbrookhill / Sandalwood
FOR LEASE
Brampton $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent
Markham Rd & 16th Ave
FOR LEASE
Markham $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்! நேரில் கோரிக்கை விடுத்ததாக ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவிப்பு!




விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும் என தாம் இந்தியா சென்றிருந்த வேளை கோரிக்கை விடுத்ததாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் துளசி தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதை தெரிவித்தார்.

அண்மையில் ஜனநாயக போராளிகள் கட்சிக்கு இந்தியா செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. அந்த சந்தர்ப்ப த்தில் நாங்கள் டில்லியில் பாஜகவின் முக்கியஸ்தர் ஒருவரை சந்தித்த போது பல்வேறுபட்ட கோரிக்கையினை நாங்கள் முன் வைத்திருந்தோம்.

அந்த கோரிக்கைகள் அவரால் செவி சாய்க்கப்பட்டதோடு அதற்கு தீர்வுகள் வழங்கப்படும் என நம்புகின்றோம்.

மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும், தொல்லியல் திணைக்களத்தினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக பிரச்சனை களை ஏற்படுத்தப்படுகின்றன.

அவை நிறுத்தப்பட வேண்டும் , கிழக்கு பகுதிகளில் இஸ்லாமிய மக்கள் தமிழர் களின் காணிகளை அபகரித்து திட்ட மிட்ட குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமை நிறுத்த வேண்டும் ,தேர்தல் அரசியலுக்கு வந்திருக்கின்ற விடுதலைப் புலிகளது ஜனநாயக வழி முறைகளை ஏற்று அவர்கள் மீதான தடையினை நீக்க வேண்டும். குறிப்பாக தென்னாசிய பிராந்தியத்தில் முக்கிய வல்லரசான இந்தியா புலிகளின் தடை நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கை களை நாங்கள் முன் வைத்தோம்.

அத்தோடு தமிழர்களுக்கான ஒரு சம ஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். அதற்கு 87 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையிலே கொண்டு வரப்பட்ட 13 வது திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரினோம் என்றார்.

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம்:- சசிகலா உட்பட 4 பேர் மீது விசாரணைக்கு உத்தரவு



மறைந்த முன்னாள் தமிழக முதலமை ச்சர் ஜெயலலிதா மரணம் குறித்த சசி கலா உட்பட 4 பேர் மீது விசாரணை க்கு ஆறுமுகசாமி விசாரணை ஆணை யத்தின் அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

ஜெயலலிதா மரணம் குறித்த ஆறுமுக சாமி விசாரணை ஆணையத்தின் அறிக்கை கடந்த 18 ஒக்டோபர் 2022 சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது.

ஜெயலலிதாவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பலரும் தெரிவித்த நிலை யில், கடந்த 2017 ஆம் ஆண்டு செப் டம்பர் 25 ஆம் தேதி ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப் பட்டது.

சுமார் 5 ஆண்டுகளுக்குப் பிறகு 600 பக்கங்கள் கொண்ட இறுதி அறிக் கையை சமீபத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் நீதிபதி ஆறுமுகசாமி அளித்தார்.

இந்நிலையில் ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டப்பேரவையில் 18 ஒக் 2022 செவ் வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டு ள்ளது

அறிக்கையில் சசிகலா, டாக்டர். கே.எஸ். சிவகுமார், அப்போதைய சுகாதரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், அப்போ தைய சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் ஆகியோர் குற்றம் செய்தவர்களாக முடிவு செய்யப்பட்டு, ஆறுமுகசாமி ஆணையம் விசாரணை க்கு பரிந்துரைப்பதாக சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் தக வல் வெளியாகி உள்ளது.

மேலும் எய்ம்ஸ் மருத்துவக் குழு 5 முறை அப்பல்லோ வந்திருந்தாலும் ஜெயலலிதாவுக்கு முறையான சிகிச்சை அளிக்கவில்லை என கூறப்பட்டுள்ளது.

## யாழ்.மாநகர முதல்வரின் அதிரடி தீர்மானம்

யாழ்.மாநரக எல்லைக்குள் வீதிகள் மற்றும் பொது இடங்களில் குப்பை களை வீசுகின்றவர்களை புகைப்படம் அல்லது காணொளி பதிவு ஆதார த்துடன் மாநகர சபைக்கு அறிவிப்பவர்களுக்கு குறித்த குற்றத்தை மேற் கொண்டதற்காக அறவிடப்படும் தண்டப்பணத்தில் இருந்து 10 வீத தொகையை சன்மானமாக வழங்குதாக யாழ்.மாநகர சபை தீர்மானித்து ள்ளது. யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நடை பெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகர எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள், அவர்களின் வீடு களுக்கு முன்னுள்ள வீதியோரத்தினை தூய்மையாக பேண வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தூய்மையை பேணாத வர்களிடம் இருந்து குற்றப்பணம் அறவிடப்படும் என மாநகர முதல்வரி னால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. எனவே குற்றமிழைப்பவர்களிடம் இருந்து அறவிடப் படும் குற்றப் பணத்தில் 10 வீதம் ஆதாரம் தருபவர்களுக்கு சன்மானமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# இலங்கையின் வடக்கில் சீன இராணுவ பிரசன்னம்!

## இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் - தமிழக புலனாய்வுத்துறை

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் சீன இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. இவர்கள், கடலட்டை வளர்ப்பை தொடங்குவதற்கு அதிநவீன சாதனங்களை பயன்படுத்துகின்றனர் என்று தமிழக புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது.

அயல்நாட்டில் (இலங்கை) சீனாவின் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும் என்று அந்த அமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதியில் சீன இராணுவத்தினரின் நடமாட்டம், செய்மதிகள், ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏனைய உயர்தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இதனால், தமிழ்நாட்டின் கரையோர பகுதிகளில் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகள் அவசியம். தமிழ் நாட்டின் அனைத்து நகரங்கள், மாவட்டங்களுக்கும் இந்த எச்சரிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு புலனாய்வு பிரிவுதெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்களின் உதவியுடன் சீன இராணுவத்தை சேர்ந்த சிலர் இரகசியமாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளனர் என்று சில நாட்களுக்கு முன்னர் எச்சரிக்கை வெளியாகியிருந்தது. இந்நிலையில், இத்தகைய ஊடுருவல்கள் வேறு சக்திகளாலும் நிகழ்த்தப்படலாம் என்றும் தமிழக புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் அனலைதீவு, மீசாலை, சாவகச்சேரி பிரதேசங்களிலும், முல்லைத் தீவு உள்ளிட்ட வடக்கின் பல பகுதிகளிலும் சீன பிரஜைகளின் நடமாட்டம் உள்ளது. அவர்களின் நடமாட்டம் தமிழ் மீனவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தங்கள் ஒரேயொரு வாழ்வாதாரத்துக்கான வழியாகக் காணப்படுகின்ற கடல் வளத்தை சீனர்கள் பயன்படுத்துகின்றனர் என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தற்போதைய நிலை இலங்கை மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தலாம். வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்தியாவின் செல்வாக்குக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர் என்றும் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில், சீனர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது சர்ச்சைக்குரிய உண்மை என்று தமிழக கடலோர பாதுகாப்பு குழுவின் கூடுதல் பொலிஸ் இயக்குநரகம் தெரிவித்துள்ளது

# இந்தியக் குடியுரிமையைப் பெற ஈழத்தமிழர் தகுதியானோர்

## சென்னை மேல் நீதிமன்றம் சுட்டிக் காட்டு!

இந்திதிய குடியுரிமை திருத்தச் சட்டப்படி இலங்கை இனப் பிரச்சனையால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இந்திய குடியுரிமை பெற தகுதியானவர்கள் என்று சென்னை மேல் நீதிமன்றக் கிளை சுட்டிக் காட்டியுள்ளது.

மேல் நீதிமன்ற கிளையில் திருச்சியை சேர்ந்த அபிராமி தாக்கல் செய்த மனு என் பெற்றோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இலங்கைப் போரால் அகதிகளாக இந்தியா வந்தனர்.

நான் இந்தியாவில் 1993இல் பிறந்தேன். இந்தியாவில் ஆதார் அட்டை பெற்றுள்ளேன். எனக்கு இந்திய குடியுரிமை கேட்டு திருச்சி ஆட்சியரிடம் மனு அளித்தேன். அவர் எனது விண்ணப்பத்தை மத்திய அரசுக்கு அனுப்பாமல் உள்ளார். என் விண்ணப்பத்தை மத்திய அரசுக்கு அனுப்ப ஆட்சியருக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கேட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் பிறப்பித்த தீர்ப் பில் மனுதாரரின் பெற்றோர் இலங்கையை சேர்ந்தவர்கள். மனுதாரர் இந்தியாவில் பிறந்துள்ளார். அவர் இலங்கை குடிமகளாக இல்லை. மனுதாரரின் இந்திய குடியுரிமை கோரிக்கையை நிராகரிப்பது சரியல்ல. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளில் துன்புறுத்தப்படும் சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்குவதற்கான குடியுரிமை சட்டத் திருத்தத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.


அந்தச் சட்டத்தில் இலங்கையை சேர்ந்தவர்கள் சேர்க்கப்படவில்லை. இலங்கை இனப்பிரச்னையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இந்து தமிழர்கள் தான். இதனால், குடியுரிமை திருத்தச் சட்டப்படி இலங்கையை சேர்ந்தவர்களும் இந்திய குடியுரிமை பெற தகுதியானவர்களே.

இதனால் மனுதாரர் குடியுரிமை கோரி அனுப்பிய விண்ணப் பத்தை திருச்சி மாவட்ட ஆட்சியர் மத்திய உள் துறை செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

மத்திய உள்துறை செயலாளர் மனுதாரரின் கோரிக்கை குறித்து 16 வாரங்களில் சட்டத்துக்கு உட்பட்டு பரிசீலனை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.இதேவேளை இலங்கையில் மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்களை கடக்கும் நிலையில் அவர்களுக்கு எந்த ஓர் உரிமையையும் எந்த அரசாங்கமும் கொடுக்கவில்லை. இதன் விளைவாக நிலம் உரிமை,மொழி உரிமை, கலாசார உரிமை அனைத்தையும் இழந்து நிற்கும் நிலை ஏற் பட்டுள்ளதாகவும் தெரிவித்து ஹற்றன் நகரில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களின் மாண்பைப் பாதுகாக்கும் அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேலின் தலைமையில் இந்த போராட்டம்ஹற்றன் மல்லியப்பு சந்தியில் இடம்பெற்றது.

எதிர்ப்பு கோஷங்களைஎழுப்பியவாறு, எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவண்ணம் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மலையக மக்கள் இலங்கையில் காலடி வைத்து எதிர்வரும் 2023ஆம் வருடத்தோடு 200 வருடங்கள் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே

24 ஒக்டோபர் 2022 திங்கள்கிழமை:- தீபாவளி திருநாள்
அமாவாசை விரதம்.
கேதார கௌரி விரதம் நிறைவு பெறுகின்றது.
விஷேட அபிஷேகம் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் .
உபயம்: பிறேம் லால் குடும்பம்

கேதார கௌரி விரதம் அனுஸ்டித்தவர்கள்,
நிறைவு நாள் அன்று நூலை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கந்தசஷ்டி:-
25 ஒக்டோபர் 2022 செவ்வாய்கிழமை
கந்த சஷ்டி விரதம் ஆரம்பம்- முருகப்பெருமான் வீதீ உலா வருவார்.

1ம் நாள் செவ்வாய்கிழமை (25 ஒக்டோபர் 2022)
பூஜை உபயம்:- சுகந்தன் கவிதா குடும்பம்

2ம் நாள் புதன்கிழமை (26 ஒக்டோபர் 2022)
பூஜை உபயம்: கிருபாகரன் சித்ரா குடும்பம்

3ம்நாள் வியாழக்கிழமை (27 ஒக்டோபர் 2022)
பூஜை உபயம்:- சிவநேஷ்வரன் ஜெயகரன் குடும்பம்

4ம் நாள் வெள்ளிக்கிழமை (28 ஒக்டோபர் 2022)
பூஜை உபயம்:- வரதராஜன் குடும்பம்

5ம் நாள் சனிக்கிழமை (29 ஒக்டோபர் 2022) வேல் வாங்குதல்
பூஜை உபயம்: யோகமலர் சிவநாதன் குடுபம்பம்

6ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (30 ஒக்டோபர் 2022) சூரன்போர்
பூஜை உபயம்: சிவஞானசுந்தரம் பிருந்தன் குடும்பம்

31ஒக்டோபர் 2022 திங்கள்கிழமை
அதிகாலை 5.00 மணிக்கு பாறணை
பூஜை உபயம்: Dr. தவா குடும்பம்

31ஒக்டோபர் 2022 திங்கள்கிழமை
இரவு திருக்கல்யாணம்
பூஜை உபயம்: வரதன் கீதா குடும்பம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் வரை இலங்கைக்கு நிதி உதவிகள் இல்லை - ஜப்பான் புதிய நிபந்தனை

இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பான உடன்பாடு ஏற்படும் வரை இலங்கையில் 12 திட்டங்களுக்கான நிதியுதவியை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனமான ஜெய்க்கா இடைநிறுத்தியுள்ளதாக நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடை நிறுத்தப்பட்ட திட்டங்களில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கும் திட்டமும் உள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பான உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர், திட்டங்களுக்கான நிதியுதவியை மீள ஆரம்பிக்கத் தயார் ஜெய்க்கா நிறுவனம் தமக்கு அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் கடன் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் உறுதிமொழியை ஜெய்க்கா விரும்புவதாக நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், உள்ளூர் நிதியுதவியுடன் ஜெய்க்கா திட்டத்தின் சில பணிகள் தொடரும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகள் 8 பேருக்கு பொதுமன்னிப்பு! தீபாவளி தினத்தன்று விடுவிக்கப்படுவார்கள்!

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்கள் அனைவரும் தீபாவளி தினத்தன்று விடுதலை யாவர்.

ரகுபதி சர்மா, வரதராஜன், இலங்கேஸ்வரன், நவதீபன், ராகுலன், காந்தன், சுதா, ஜெபநேசன் ஆகியோரே பொது மன்னிப்பின் கீழ் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். அத்துடன், இவர்களை விடுதலை செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவுக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் பாராளுமன்றத்தில் அவர் நன்றிகளை தெரிவித்தார்.

பொதுமன்னிப்பில் விடுதலையாகும் எண்மரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஐந்து வருடம் முதல் 200 வருடங்கள் வரை தண்டனை வழங்கப்பட்டவர்கள். இவர்களின் விடுதலை தொடர்பாக சிறைச்சாலை திணைக்களத்தினரிடம் நான் தொடர்பு கொண்ட போது குறித்த 8 பேரை விடுவிப்பதற்கான கடிதம் கிடைத்திருக்கின்றது தீபாவளி தினத்தன்று இவர்கள் விடு தலை செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது என்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் கூறினார்

# யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையாகிய 17வயது மகனைத் திருத்தித் தருமாறு பொலிஸில் ஒப்படைத்த மற்றுமொரு தாய்

யாழ்ப்பாணம் கோப்பாய் காவல்துறை பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் மேற்கு பகுதியில் தாயொருவர் கடந்த இரண்டு வருடங்களாக போதை பொருளுக்கு அடிமையாகி உள்ள தனது மகனை திருத்தித் தருமாறு கோப்பாய் காவல் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார்.

கோப்பாய் காவல் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் மேற்கு பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஒப்படைக்கப்பட்ட இளைஞன் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றிய பின்னர் வீட்டில் இருப்பதாகவும் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதன் காரணமாக நேரத்துக்கு ஒழுங்காக சாப்பிடுவதில்லை இரவில் தூக்கமின்மை போன்ற பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்தார்.

தனது மகனின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்த தாய் தனது மகனை கோப்பாய் காவல்துறை நிலைய பொறுப்பதிகாரியிடம் திருத்தி தருமாறு ஒப்படைத்துள்ளார்.காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த இளைஞன் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட உள்ளதாக கோப்பாய் காவல் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# “பொன்னியின் செல்வன்” படத்தினைப் பார்த்து ரசித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்பதிகள்



எழுத்தாளர் கல்கி எழுதிய புகழ் பெற்ற வரலாற்று நாவலை அடிப்படையாகக் கொண்டு இயக்குநர் மணிரத்னம் இயக்கியுள்ள படம் பொன்னியின் செல்வன். இதில் விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, விக்ரம் பிரபு, சரத் குமார், பிரபு, ஜெயராம், ரஹ்மான், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஐஸ்வர்யா லக்□ஷ்மி, அஸ்வின், கிஷோர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.படத்தின் திரைக்கதையை மணி ரத்னமும் குமரவேலும் இணைந்து உருவாக்கியுள்ளார்கள். வசனம் ஜெயமோகன், இசை ஏ.ஆர். ரஹ்மான், ஒளிப் பதிவாளர் ரவிவர்மன், கலை தோட்டா தரணி. பிரமா ண்ட பொருட்செலவில் உருவாகியுள்ள இந்த படம் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி உலகம் முழுவதும் ஐந்து மொழிகளில் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் மனைவியும் கொழும்பிலுள்ள திரையரங்கொன்றில் பொன்னியின் செல்வன் திரைப்படத்தை பார்வையிட்டார். அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனும் பங்கேற்றிருந்தார்.

# மகிந்தாவின் மீள் பிரவேசம்?

அதிகாரத்திலிருந்து வெளியேறிய மகிந்த ராஜபக்ஷ மீளவும் மக்கள் முன் தோன்றியிருக்கின்றார். மீளவும் பொதுஜன பெரமுன மகிந்தவை முன்னிலைப்படுத்தி மக்கள் மத்தியில் பிரவேசித்திருக்கின்றது. தாங்கள் தவறு செய்து விட்டோம் என்னும் சுலோகமே மகிந்தவின் பிரதான கோஷமாக இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாடு முன்நோக்கி நகர்வதான தோற்றம் தெரிகின்ற சூழலில் தான் மகிந்த ராஜபக்ஷ மீளவும் பொதுஜன பெரமுனவின் தலைமைத்துத்தை கையிலெடுத்திருக்கின்றார்.

கோட்டாபயவின் அணுகுமுறைகளில் தவறுகள் இருக்கின்றன ஆனால், நானிருந்திருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதே மகிந்த ராஜபக்ஷவின் மீள் பிரவேசத்தின் கோஷமாக இருக்கின்றது. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அதேவேளை நெருக்கடிகள் அதிகரித்தால் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை கலைக்கும் முடிவையும் எடுக்கக்கூடும். இவ்வாறானதொரு பின்னணியில் தான் மகிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் அடுத்த கட்டத்துக்கு தலைமையேற்க முன்வந்திருக்கின்றார்.

எவ்வாறெனினும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. அது ஒரு விஷப் பரீட்சையாக முடிந்து விடலாம். எனவே, பெருமளவுக்கு பிறிதொருவருக்கு ஆதரவளிக்கவே வாய்ப்புண்டு. அது யார் என்பதும் சிக்கலானது.

அதேவேளை, பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிருக்கும் டலஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவன்ஸ அணியினர் தனியாகத் தேர்தலை எதிர்கொள்ளும் வியூகங்கள் தொடர்பில் உரையாடி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் மகிந்த ராஜபக்ஷ நேரடியாகக் களத்தில் இறங்கியிருகின்றார். தற்போதுள்ள சூழலில் மகிந்த ராஜபக்ஷவை தவிர வேறு எவராலும் பொதுஜன பெரமுனவுக்கு தலைமை தாங்க முடியாது. ஆனால், மகிந்த தலைமையில் பொதுஜன பெரமுனவுக்கு புத்துயிரளிக்கும் முயற்சி இடம 'பெறுமாக இருந்தால் அடுத்த ஜனாதிபதி தேர்தல் குழப்பங்கள் நிறைந்ததாகவே இருக்க வாய்ப்புண்டு. அதாவது, பலம் பொருந்திய நாடுகளின் ஆடுகளமாக தேர்தல் மாற வாய்ப்புண்டு.

இந்திய அமெரிக்க கூட்டு ஒருபுறமும் சீனா மறுபுறமுமாக தேர்தல் களத்தில் தலையீடு செய்ய வாய்ப்புண்டு. இந்தியா உடனடி அயல்நாடாக இருப்பதால் இலங்கை விடயங்களில் தலையீடு செய்ய வேண்டிய கட்டாயமுண்டு.

இந்தியாவின் கொல்லைப் புறத்தில் சீனா வலுவாக காலூன்றியிருக்கின்றது.

அதேவேளை இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் வலுவான காலூன்றலை தடுத்து நிறுத்த வேண்டிய தேவைப்பாடு அமெரிக்காவுக்கு உண்டு.

இந்த பின்புலத்தில் 2024 தேர்தல் அனைத்துத் தரப்பினராலும் கவனிக்கப்படும் தேர்தலாகவே இருக்கப் போகின்றது.

சீனா ஏனைய நாடுகளில் தலையிடா கொள்கையை கொண்டிருப்பதாக கூறிக் கொண்டாலும் கூட நடைமுறையில் அப்படியிருக்க முடியாது.

ஏனெனில், இலங்கைத் தீவில் அதிக முதலீடுகளையும் நீண்டகால இலக்குகளையும் கொண்டிருப்பதால் சீனாவுக்கு உள்ளூர் மட்டத்தில் அரசியல் ஆதரவு கட்டாயமானது.

இந்த பின்புலத்தில் தான் மனித உரிமைகள் தொடர்பான மேற்குலக அழுத்தங்களை சீனா தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது.

எனவே சீனா நிச்சயமாக தென்னிலங்கை கட்சிகள் மீது செல்வாக்கு செலுத்தவே முயற்சிக்கும். அதேவேளை ஒரு தரப்பின் மீது மட்டும் கவனம் செலுத்தாது.

ஒரே நேரத்தில் பெரிய கட்சிகள் மீதும் அதேவேளை பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி இருக்கும் சிறிய தரப்பினரையும் புறம் தள்ளாது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் மகிந்தவின் மீள் பிரவேசம் மீளவும் இலங்கைத் தீவின் மீதான பலம் பொருந்திய நாடுகளின் பலப் பரீட்சையை தீவிரப்படுத்தலாம்.

# 13வது திருத்தத்திற்குப் பதில் புதிய ஒப்பந்தம் அவசியம்! இந்தியாவுக்கான ஸ்ரீலங்கா தூதுவர் மிலிந்த மொறகொட தகவல்!

அரசியல் ரீதியாக இலங்கை நிலைமாறும் கட்டத்தில் இருக்கிறது. சமூக, அரசியல் ரீதியான ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இலங்கை ஒரு சிக்கலான நாடு. பல மதங்கள், இனங்களுடன் 13ஆம் திருத்த சட்ட பிரச்னையும் உள்ளது. நாம் ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவர் மிலிந்த மொறகொட. மேலும், இந்தியாவுக்கு ஏற்படும் எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இலங்கைக்குமான பாதுகாப்பு அச்சுறுத்தல். இந்தியாவின் நலன்களுக்கு பாதகமாக எந்த ஒரு வெளிநாடும் இலங்கையின் துறைமுகங்களை பயன்படுத்த அனுமதிக்காது என்றும் அவர் கூறியுள் ளார்.




ரைம்ஸ் ஒவ் இந்தியா’வுக்கு மிலிந்த மொறகொட அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், கடன் நெருக்கடியால் சிக்கியுள்ள இலங்கையின் நிலையான பொருளாதார மீட்சிக்கான திறவுகோல் இந்தியாவே. மூலோபாய ரீதியாக ஜப்பான், இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் மற்றும் இந்தியாவுடன் முத்தரப்பு ஒத்துழைப்பு வாய்ப்புகளை இலங்கை ஆராய்ந்து வருகிறது.

இலங்கை இந்தியாவுடன் பொருளாதார ஒருங்கிணைப்பையே விரும்புகிறது. இது கடன் நெருக்கடியிலிருந்து விரைவாக மீள்வதை உறுதி செய்யும். இதேநேரத்தில், அண்மையில் சீன இராணுவத்துக்கு சொந்தமான தொழில்நுட்ப கப்பலை இலங்கை அனுமதித்தது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

இது போன்ற பிரச்னைகளுக்கு இரு நாடுகளும் தீர்வு காண அனுமதிக்கும் பொறிமுறையை இறுதி செய்ய இந்தியாவுடன் இலங்கை பேச்சு நடத்துகிறது. இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பு நடந்தவுடன் புவிசார் அரசியல் பிரச்னைகள் தாமாகவே தீர்க்கப்படும். அதுவரை நாம் நிச்சயமாக பேச வேண்டும். நாம் அபாய எல்லைகளை தாண்டவில்லை. பாதுகாப்பு தொடர்பில் எமது அடிப்படை கொள்கை என்னவென்றால், இந்தியாவுக்கு ஏற்படும் எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இலங்கைக்குமான பாதுகாப்பு அச்சுறுத்தலே. இந்தியாவும் இதையே நினைக்கும் என்று நம்புகிறோம் என்றார்.

13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் தமிழர் பிரச்னையில் இலங்கை தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற போதுமான பங்களிப்பை செய்யவில்லை என்று மனித உரிமைகள் பேரவையில் இந்தியா கூறியமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மிலிந்த மொறகொட இந்திய அரசாங்கம் கூறியதில் புதிதாக எதுவுமும் இல்லை. நுணுக்கம் மாறியிருக்கலாம் ஆனால், அரசியல் ரீதியாக இலங்கை நிலைமாறும் கட்டத்தில் இருக்கிறது. சமூக, அரசியல் ரீதியான ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இலங்கை ஒரு சிக்கலான நாடு. பல மதங்கள், இனங்களுடன் இந்தப் பிரச்சனையும் (13ஆம் திருத்த சட்டம்) அதே வகையின் கீழ் வருகிறது. நாம் ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும். என்று கூறியுள்ளார்.

## விடுதலைப்புலிகளை நான் அழிக்கவில்லை - எரிக்சொல்ஹெம்

விடுதலைப்புலிகளை நான் அழித்ததாக தெரிவிக்கப்படுவது சரியானதில்லை என தெரிவித்துள்ள நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் காணாமல் போனவர்கள் குறித்த பதில்களை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் வடக்கிற்கு அதிகார பகிர்வு அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார் பேட்டியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தீவிரவாத போக்குடைய தமிழ் சிங்களவர்கள் உள்ளனர் சிங்கள தீவிரவாதிகள் நான் விடுதலைப்புலிகளிற்கு ஆதரவளித்தாக தெரிவித்தனர், தமிழ்தீவிரவாதிகள் நான் விடுதலைப்புலிகளை அழித்தேன் என தெரிவித்தனர் இரண்டும் சரியான விடயமில்லை. நாங்கள் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பினோம். ஆனால் இன்று நான் இலங்கையின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்துகின்றேன் அதன் ஒரு பகுதியாக இருப்பது குறித்து நன்றியடைகின்றேன். உலகின் அழகான இடங்களில் இலங்கையும் ஒன்று

இலங்கை தனது எதிர்காலம் குறித்து சிந்திக்கவேண்டும் எப்படி பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வது குறித்தும் மாகாணங்களிற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது குறித்தும் கவனம் செலுத்த(22ம் பக்கம் பார்க்க)




தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# தேர்தலுக்கு அஞ்சும் ரணில்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக
– பார்த்தீபன் –

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களைப் பின் போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சூட்சுமமான உபாயமொன்றை முன்னெடுத்ததையடுத்து எதிர்க்கட்சிகள் அனைத்துமே உஷாரடைந்திருக்கின்றன. குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தலை நடத்தவில்லையென்றால் போராட்டக்களத்தில் இறங்கப் போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்திருப்பதையடுத்து அரசியல் களம் பரபரப்பாகியிருக்கின்றது. பலப் பரீட்சை ஒன்று உருவாகியிருக்கின்றது.

இன்றைய தருணத்தில் தேர்தல்களை யாரும் வரவேற்கத் தயாராகவில்லை என்பது உண்மை. பிரதான எதிர்க்கட்சிகள் கூட அதற்குத் தயாராகவில்லை. ஆனால்.தன்னுடைய நலன்களுக்காக தேர்தலை பின்போடுவதில் ரணில் வெற்றி பெற்றால், எதிரணிகளை அது அரசியல் ரீதியாகப் பாதிக்கும். அதனால் தான் பிரதான எதிர்க்கட்சிகள் இப்போது வரிந்து கட்டிக ்கொண்டு போராட்டகளத்தில் இறங்கப் போவதாக எச்சரிக்கைகளை விடுத்துக்கொண்டுள்ளன.

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எப்போதோ நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஒன்பது மாகாண சபைகளும் இப்போது ஆளுநர்களால் தான் நிர்வாகிக்கப்படுகின்றது. நல்லாட்சி எனப்படும் மைத்திரி – ரணில் கூட்டாட்சி இடம்பெற்ற காலத்திலேயே வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் உள்ளிட்ட பெரும்பாலான மாகாண சபைகளின் பதவிக்காலங்கள் முடிவுக்கு வந்து விட்டன.

மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றம் ஒன்றைச் செய்வதற்காக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டமூலம் ஒன்றை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்தத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகின்றது. இருந்தபோதிலும், பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவது என அனைத்து அரசியல் கட்சிகளும் பின்னர் முடிவுக்கு வந்தன. அதற்கான திருத்தம் மீண்டும் பாராளுமன்றத்தில் செய்யப்பட வேண்டும்.

தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் மாகாண சபைகளின் நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கு அரசாங்கம் விரும்பியிருந்தால் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய சட்டத் திருத்தம் ஒன்றின் மூலமாக இதனைச் செய்திருக்க முடியும். இன்று கூட செய்ய முடியும். ஆனால், அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களைச் சந்திப்பதற்குள்ள தயக்கம் காரணமாக அதனைத் தவிர்க்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட அதனைச் செய்வதற்குத் தேவையான அழுத்தங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதுடன் தமது பணியை நிறுத்திக் கொள்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையில் வாகனப் பேரணியை நடத்தும் சுமந்திரன் சாணக்கியன் குழுவினர் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும் எனக் கோரி இது வரையில் எந்தப் போராட்டத்தையும் நடத்தவில்லை.

இந்த நிலையில் ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான அதிகாரம் இப்போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கைகளுக்கு வந்திருக்கின்றது. அதாவது செப்ரெம்பர் மாத இறுதிக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட முடியும்.

உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக்காலம் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்ட நிலையில் அதனை மேலும் நீடிக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவது தான் தேர்தல் ஆணைக்குழுவின் திட்டம். அதற்கான அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது.

இந்த நிலையில் தான் ரணில் விக்கிரமசிங்க முந்திக் கொள்ளப் பார்க்கிறார். தனியொருவனாக வந்து நிறைவேற்று அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொண்டிருக்கின்ற ரணில், அரசியலில் இரண்டு இலக்குகளுடன் இப்போது காய்நகர்த்துகின்றார். ஒன்று தனது பதவியைப் பயன் படுத்திக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்துவது. இரண்டாவது, அதன் மூலமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி அதிகாரத்தைக் கைப்பற்றுவது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களின் மொட்டு அணி தன்னை ஆதரிக்கும் என அவர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

ஆனால், அதற்கு முன்னர் வரக்கூடிய தேர்தல்கள் குறிப்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தமது பலவீனத்தை பகிரங்கமாக்கி விடும் என்பதால், அவற்றைத் தவிர்ப்பதற்கு அவர் நினைக்கின்றார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அனைத்துக் கட்சிகளும் தனித்தனியாக களமிறங்கும் போது, ஐக்கிய தேசியக் கட்சி காணாமல்போய் விடும் என ரணில் அஞ்சுகிறார். கடந்த பொதுத் தேர்தலிலும் அவரது கட்சிக்கு அதுதான் நடந்தது.

ரணில் ஜனாதிபதியாக வந்த போது நாட்டின் பொருளாதார நெருக்கடியை அவர் முடிவுக்குக் கொண்டு வருவார், என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவர் எதிர்பார்த்த இடங்களிலிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களில் இன்று வரை திருப்திகரமான பிரதிபலிப்பு கிடைக்கவில்லை. ஜப்பானில் ஒரு மாநாட்டை நடத்தும் திட்டமும் தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலையில்தான் இலங்கையை வருமானம் குறைந்த நாடாகப் பிரகடனப்படுத்தும் தீர்மானத்தை அமைச்சரவை இப்போது எடுத்துள்ளது.

இதன் மூலமாகவும் எதிர்பார்த்த பலன்



கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. ஆனால், வரிகள் அதிகரித்துள்ளன. புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விலைவாசியை மக்களுக்கு எட்டாத உயரத்துக்கு கொண்டு செல்வதற்கு அவை காரணமாகவிருந்துள்ளது. ஆனால், சுமார் நான்கு மடங்கு அதிகரித்துள்ள விலைவாசியை, தமது வழமையான மாத வருமானத்துடன் சமாளிக்க முடியாமல் பல குடும்பங்கள் வறுமையின் எல்லைக்குச் சென்று விட்டன. இந்த நிலை இன்னும் மோசமடையலாம் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள். இது ரணிலுக்கும் தெரிகிறது.

தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதற்கான தருணம் இதுவல்ல என ரணில் கருதுவதற்கு இதுவும் காரணம். இந்த வேளையில் தேர்தல்களை நடத்துவது முகத்தில் சேறை அப்பிக்கொள்வதற்கு சமன். மக்கள் தமது சீற்றத்தை தன் மீது காட்டுவார்கள் என அவர் அஞ்சுகிறார். அதனால் தான், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தொகையை அரைவாசியாகக் குறைக்கப் போவதாகவும், தேர்தல் சட்டத்தை மாற்றப் போவதாகவும் ரணில் கடந்த வாரம் அறிவித்திருக்கின்றார்.

இதனைக்க ாரணமாகச் சொல்லி உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களையும் ஒத்திவைப்பது தான் ரணிலின் உபாயம். மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தள்ளிப் போடுவதற்கு கையாண்டது போன்ற ஒரு உபாயத்தை இங்கு ரணில் பயன்படுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள மொட்டு அணியும் இதனை ஆதரிக்கும். ராஜபக்ஷக்கள் மீதான மக்களின் சீற்றம் இன்னும் முற்றாகத் தணியாத நிலையில் மீண்டும் மக்கள் முன்பாகச் செல்வதற்கு மொட்டும் தயாராகவில்லை. ஆக, பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் தான் நினைத்ததை சாதித்து விட முடியும் என ரணில் எதிர் பார்க்கின்றார். பிரதிபலிப்புக்கள் எவ்வாறுள்ளது என்பதை அறிவதற்காகவும் இந்த அறிப்பை ரணில் வெளியிட்டிருக்கலாம்.

இந்த நிலையில் விழித்துக் கொண்டுள்ள எதிர்க்கட்சிகளால் தேர்தல்களை நடத்துவதற்கான அழுத்தங்களை கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளன. பிரதான எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள் என்பன இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டுக்காக இணைந்து களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளன. போராட்டங்களை ஒடுக்குவதற்கான சில உபாயங்களையும் கடந்த சில வாரங்களில் ரணில் பரீட்சித்துப் பார்த்துள்ளார். இந்த நிலையில், உள்ளூராட்சி தேர்தல்களை மையப்படுத்தியதான ஒரு பலப் பரீட்சையை அடுத்து வரும் வாரங்களில் எதிர்பார்க்க முடியும்!



# சரணடைந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் இராணுவம் - பொலிசாரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை!

## ஆணைக்குழுக்களால் பயனில்லை என்கிறார் முன்னாள் பாதுகாப்பு செயலர்

பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டதன் பின்னர் இடம் பெற்றிருக்கும் காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும், குற்றமிழைத்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைத் தண்டிக்குமாறும் கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இருப்பினும் இன்று வரை முப்படைகளைச் சேர்ந்த எத்தனை பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்? எத்தனை பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்? என்று நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பேர்னாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச் செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பேர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டச்செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ்நகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரடங்கிய ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த ஆணைக் குழுவின் முன்னிலையில் ஆஜரான ஒஸ்டின் பேர்னாண்டோ, தான் கடந்த 2001ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய போது பெற்ற அனுபவங்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப் படாமை, உடலாகம, தருஸ்மன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளடங்கலாக கடந்த காலங்களில் இயங்கிய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள், உண்மையைக் கண்டறிவதிலும் நல்லிணக்கத்தை நிலை நாட்டுவதிலும் இலங்கை அரசாங்கம் அடைந்த தோல்வி,

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றைப் புதிதாக ஸ்தாபிப்பதில் காணப்படும் சவால்கள், அவ்வாறு ஸ்தாபிப்பதாயின் மிக முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அதன்படி ஆணைக்குழுவின் முன்னிலையில் அவரால் எடுத்துரைக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

பாதுகாப்புச்செயலாளராகப் பதவி வகித்த 2001 ஆம் ஆண்டின் பின்னரான காலப் பகுதியிலேயே நான் இவ்விவகாரங்



களுடன் மிகநெருக்கமாகத் தொடர்பு பட்டேன். அக்காலப்பகுதியில் ஒருபுறம் இராணுவத்தினரையும் மறுபுறம் தமிழீழ விடுதலைப்புலிகளையும் கையாள வேண்டியிருந்தது.

அதனைத் தொடர்ந்து போர் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் உடலகம ஆணைக்குழு, தருஸ்மன் ஆணைக்குழு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்றவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பல முக்கிய கண்டறிதல்களையும், பரிந்துரைகளையும் நான் வாசித்திருக்கின்றேன்.

இருப்பினும் அந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்திருக்கின்றது.

குறிப்பாக பாதுகாப்புப்படையினரிடம் சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட நபர்களில் காணாமலாக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும், குற்றமிழைத்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைத் தண்டிக்குமாறும் சில அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், முப்படைகளைச் சேர்ந்த எத்தனை பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, எத்தனை பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்? இவ்விடயத்தில் அரசாங்கங்கள் பொய்யுரைத்திருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றைப் புதிதாக ஸ்தாபிப்பது குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருவதுடன் அவற்றில் சில விமர்சனங்கள் நியாயமானவையாகும்.

குறிப்பாக காணாமல் போனோரின் எண்ணிக்கை தொடர்பில் தருஸ்மன் அறிக்கையில் தவறான தரவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதுடன், நானும் அதனை ஏற்றுக் கொள்கின்றேன். எனவே படையினரிடம் சரணடைந்த பலர் காணாமல் போயிருப்பதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தவேண்டும். அதேபோன்று இந்தக் குற்றங்களை இழைத்தவர்கள் இன்னமும் இராணுவத்தில் அங்கம் வகிக்கக்கூடும்.

(22ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இலங்கையில் ரணில் உருவாக்கிய இன நல்லிணக்கக் குழு கண்துடைப்பா?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இதன் முதற் கட்டமாக, நல்லிணக்கம் தொடர்பிலான அமைச்சரவை உப குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த உபகுழுவை நியமிப்பதற்காக, ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக மற்றும் வடக்கு, கிழக்கு மோதல்களின் பின்னர் மீள்குடியேற்றம், காணி மற்றும் காணாமல் போனோர் தொடர்பில் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதியினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் அங்கத்தவர்களாக பிரதமர் தினேஷ் குணவர்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும்



அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நல்லிணக்கம் தொடர்பில் அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டமை குறித்து பல்வேறு தரப்பினரும் தற்போது விமர்சனங்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாறி மாறி வந்த அரசாங்கங்கள் இவ்வாறான அமைச்சரவை உபகுழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்களை நியமித்த போதிலும், அவற்றினால் இன்று வரை எந்தவித தீர்வுகளும் கிடைக்கவில்லை என மக்கள் கூறுகின்றனர்.

தமிழர்களுக்கு சரியான தீர்வு கிடைக்கப் போவதில்லை எனவும் அதனாலேயே தாம் வெளிநாடுகளை நம்பியுள்ளதாகவும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தை நாங்கள் எந்த விதத்திலும் நம்பவில்லை. வெளிநாட்டை தான் நம்பியுள்ளோம். இந்த அரசாங்கம் என்ன தான் செய்தாலும், அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எந்த அமைச்சர்கள் வந்தாலும், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். எங்களின் ஒரே முடிவு வெளிநாடு தான். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை தான் நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்.

அந்த நாடுகள் வந்தால் எங்களுக்கு சரியான தீர்வுகள் கிடைக்கும். இவர்கள் ஏமாற்றிக் கொண்டே இருப்பார்கள். யார் வந்தாலும், தமிழர்களுக்கு நீதி கிடைக்க போவதில்லை. எங்களின் பிள்ளைகள் குறித்து முடிவை சொல்ல போறதும் இல்லை. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். பாதுகாப்பு ஒன்று இருக்க வேண்டும். எங்களின் பிள்ளைகளை விட்டால் போதாது, எங்களுக்கு என்று ஒரு பாதுகாப்பு வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா தெரிவிக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் குழுக்கள் மீது தமக்கு நம்பிக்கை கிடையாது என அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் உபகுழுக்கள் நியமிப்பதும், ஆணைக்குழுக்கள் நியமிப்பதும் சாதாரண விடயங்கள். இதில் எந்தவிதமான நம்பிக்கையும் இல்லை என்பதை தான் நாங்கள் நீண்ட காலமாக சொல்லி வருகின்றோம். நாங்கள் ஒரு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை சர்வதேசத்திற்கு காண்பிப்பதற்காகவே அரசாங்கம் இந்த குழுவை நியமித்துள்ளது. சர்வதேசத்திற்கான கண் துடைப்பே தவிர, எங்களுக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்காது. இலங்கையை இனி எந்த வகையிலும் நம்ப முடியாது' என அருட்தந்தை மா.சக்திவேல் குறிப்பிடுகின்றார்.

நல்லிணக்கம் தொடர்பில் ஏற்கனவே காணப்பட்ட உடன்பாடுகளை நடைமுறைப்படுத்தாமல் மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிப்பது நாட்டை ஏமாற்றும் நடவடிக்கை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவிக்கின்றார்.

குழு நியமனங்கள் நல்லது. குழு நியமனங்கள் என்பது முதல் நிலை செயற்பாடு. அது தொடர்ச்சியாக நடைமுறையிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் பலன்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணரக் கூடியதாக இருக்க வேண்டும். வறுமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். இன ரீதியாக, மத ரீதியாக, மொழி ரீதியாக பாதிக்கப்பட்ட எண்ணிக்கையிலே தேசிய இனங்களை சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தேசிய நல்லிணக்கம் என்பது, அவர்களை இலங்கையர்களாக சமத்துவமாக உள்வாங்கக் கூடியதாக இருக்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழு இலங்கையை ஒரு பன்முக நாடாக அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும். சிங்கள பௌத்த நாடு என்ற நிலையில், இருந்துக்கொண்டு நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியாது என்ற உறுதியில் நான் இருக்கின்றேன். நல்லிணக்க ஆணைக்குழு என்பது மீண்டும் ஆரம்பத்திலிருந்து ஆரம்பிப்பதாக இருக்கக்கூடாது.

1950களிலிருந்து பல்வேறு உடன்பாடுகளை இது குறித்து கண்டுள்ளோம். அந்த உடன்பாடுகளை கண்டு, அவை நடைமுறையாக்கப்படாமல் விடுப்பட்டுள்ளன. இடைவிடப்பட்ட இடத்திலிருந்து அதனை ஆரம்பிக்க வேண்டுமே தவிர, மீண்டும் ஆரம்பத்திலிருந்தே ஆரம்பிப்பது என்பது நாட்டை ஏமாற்றம் செயற்பாடாகும். அதனை நான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவிக்கின்றார்.

அரசியலமைப்பில் உள்ள விடயங்களை முதலில் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் அதனூடாக தமிழர்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் கடற்றொழில் அமைச்சரும், நல்லிணக்கம் தொடர்பிலான அமைச்சரவை உபகுழு உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

நான் அடிக்கடி தமிழ் தரப்பிற்கு சொல்வது, கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் சந்தர்ப்பங்களை உருவாக்கியும் அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடு.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முதல் இருந்த நிலைமை வேறு. இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பிறகு தமிழ் மக்களுக்கு கிடைத்த பொன்னான வாய்ப்புக்களை, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லியவர்கள், துரதிஷ்டவசமாக துஷ்பிரயோகம் செய்து விட்டார்கள். அண்மை வருகைத் தந்த சொல்ஹெய்ம் கூட அதனை சொல்லியிருக்கின்றார்.

இன்றைய நிலைமைக்கு ரணில் விக்ரமசிங்க தான் பொருத்தமானவர். ரணில் விக்ரமசிங்க குழுவொன்றை அமைத்திருக்கின்றார். அதில் நானும் இருக்கின்றேன். நான் இருக்கின்ற போது, என்னை மீறி அதுபோகாது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அன்று ஏற்றுக் கொண்டிருந்தால், இந்தளவிற்கு பிரச்னை வந்திருக்காது. இலங்கையின் பன்முக தன்மையை வெளிப்படுத்தும் வகையில், அதற்குள் தமிழ், முஸ்லிம் மக்களை சேர்ந்துக்கொள்ள வேண்டும்.

முதலில் இருப்பதை நடைமுறைப்படுத்துவோம். புதிதாக ஒன்று என்றால், அது வரபோவதில்லை. அரசியலமைப்பில் உள்ள விடயங்களை நாடாளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டு வந்து, திருத்தங்களை மேற்கொண்டு, அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்' என கடற்றொழில் அமைச்சரும், நல்லிணக்கம் தொடர்பிலான அமைச்சரவை உபகுழு உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கின்றார்.

# இம்மாத இறுதியில் பலாலி விமான சேவை ஆரம்பிக்க எதிர்பார்ப்பு!

யாழ்ப்பாணம் - பலாலி விமான நிலையத்திற்கு விமான சேவையை ஆரம்பிப்பதாக இந்தியா குறிப்பிட்ட போதும் பல்வேறு காரணிகளினால் சேவை ஆரம்பித்தல் தாமதப்படுத்தபடுகின்றன. இம்மாத இறுதி முதல் விமான சேவைகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரி வித்தார்.

பலாலி விமான நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும், இந்தியாவின் நிதி உதவியின் கீழ் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகையில்,

யாழ்ப்பாணம் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலைய தரத்திற்கு கொண்டு வந்தோம். அதற்கு தேவையான சான்றுகளை விமான சேவைகள் அதிகார சபையின் ஊடாக பெற்றுக் கொண்டோம்.

பின்னர் இந்தியாவின் விமான சேவைகள் நிறுவனத்திற்கு அழைப்பு விடுத்தோம். முன்னர் அவர்கள் அதற்கு இணங்கியிருந்த போதும் அதனை திறந்த பின்னர் விமானம் வரவில்லை. அது அவர்கள் பக்கத்தில் தொழில்நுட்ப ரீதியலான பிரச்சினைகளாக இருக்கலாம். அது தொடர்பான நடவடிக்கைகள் தள்ளிப் போகின்றன.

எவ்வாறாயினும் இந்த மாத இறுதியில் விமானங்கள் சில வரும் என்று கூறப்படுகின்றது. முடிந்தளவு இந்திய சுற்றுலா பயணிகளை அழைத்து வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை இந்திய அரசாங்கத்தினால் இந்த விமான நிலையத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்தி ஓடுபாதையை நீடிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அங்கு பெரிய விமானங்கள் வரக் கூடிய வகையில் கலந்துரையாடி ஓடு பாதையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். அத்துடன் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமான சேவைகளை நடத்தக் கூடிய வகையில் அங்கு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. மாலைதீவு விமான சேவை இந்த விமான நிலையம் ஊடாக சேவைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருந்த போதும் பின்னர் அந்த தீர்மானத்தில் தயக்கம் காட்டியது என்றார்.


**Restaurant**

**வேலைக்கு ஆள் தேவை**

மார்க்கத்தில் அமைந்துள்ள இலங்கை இந்திய உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவுகளை தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ள Cook உடனடி யாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 647 545 2430

2291681 Ontario Ltd

Cansintraders@gmail.com

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 ஒக்டோபர் 2022 முதல் 21 ஒக்டோபர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி யோகம்மா நல்லையா

சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி யோகம்மா நல்லையா அவர்களது 31ம்நாள் (அந்தியேட்டி) நினைவு நாள் 25 ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி யோகம்மா நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சற்குணராணி தனபாலசிங்கம்

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சற்குணராணி தனபாலசிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாள் 18 ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 23 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சற்குணராணி தனபாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு மயில்வாகனம் நிமலராஜன்

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன் - ஊடகவியலாளர் திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகள் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினசிங்கம் மதியழகன்

புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 35 வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நீலவேணி விசுவலிங்கம்

அனலைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நீலவேணி விசுவலிங்கம் அவர்களின் 35வது ஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நீலவேணி விசுவலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகமுத்து கதிர்காமநாதன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நாகமுத்து கதிர்காமநாதன் அவர்களின் 35வது ஆண்டு நினைவு நாள் 15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். கள். திரு நாகமுத்து கதிர்காமநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவஞ்சலிகள்



### திரு பழனி கனகசபை

### திருமதி கனகசபை நாகம்மா

அனலைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு,திருமதி பழனி கனகசபை, கனகசபை நாகம்மா ஆகியோரது நினைவு நாளையொட்டி அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 25 ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமை கந்தசஷ்டி உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு, பழனி கனகசபை, திருமதி கனகசபை நாகம்மா தம்பதிகளது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த பண்டிதர் திரு மனுவேல்பிள்ளை செல்வராஜா அலெக்ஸ்சாண்டர் (மாஸ்டர்) அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



12 ஒக்டோபர் 2022 புதன்கிழமை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராணி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சிசிலியம்மா பரமநாதன் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை யாழ்.மல்லாகத்தைச் சேர்ந்த திரு நாகமுத்து கதிர்காமநாதன் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி முரளிதரன் மேனகா தம்பதிகளின் செல்வப்புதல்வி இலக்கியாவின் 15வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி இலக்கியா தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



17 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி அமெண்டா அன்ரனின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி அமெண்டா அன்ரன் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



17 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமை இருபாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தவநேசன் ஆறுமுகம் அவர்களது இரண்டாது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 ஒக்டோபர் 2022 புதன்கிழமை 19 ஒக்டோபர் பேச்சு - எழுத்து ஊடகத்துக்காக உயிர் பறிக்கப்பட்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர் திரு நிமலராஜன் மயில்வாகனம் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 ஒக்டோபர் 2022 புதன்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நீலவேணி விசுவலிங்கம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 ஒக்டோபர் 2022 புதன்கிழமை **Jalene Abinas**ஸின் 27வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் **Jalene Abinas** தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



19 ஒக்டோபர் 2022 புதன்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா தர்மபாலன் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரன் சிவாஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் உருத்திரன் றோய் கஜேந்திரனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் உருத்திரன் றோய் கஜேந்திரன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



12 ஒக் 2022 புதன்கிழமை புதுச்செம்மணி வீதி கல்லியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கேமலதா விக்னராஜ் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மையம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
S. Christeen
416-258-6759

Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan
Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும் சிறப்புற வாழ்த்துகின்றோம்
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
திருமதி நவநாதன் துஷி
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரி

# இன்னிசை மாலையும் இரா

அரவிந்தனின்

Mega Tuners

இசையில்
சுப்பர் சிங்கர் புகழ் புண்யா,
ஹரிகரசுதன்
மற்றும் கனேடிய தமிழ்ப் பாடகர்கள்
இணைந்து வழங்கும்

தி
ஹரி

இன்

OCTOBER 23 2022 SUN @ 6:00PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST, SCARBOR
(FINCH & KENNEDY)

தொடர்பு
ஈழநாடு பரமேஸ்
தயவு செய்து நுழைவுச்சீட்டு
நிகழ்வுகள் சரியாக மாலை 6
தங்கள் ஆதர


GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
RBC Royal Bank · Desjardins · Manulife · Foresters

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
309-80 Corporate Dr
Scarborough, ON
M1H3G5
Mississauga Branch
45-2355 Derry Road
Mississauga, ON
L5S1V6
Tel: 416 4390224
Fax: 416 4390226

Tekon
Banquet services & Catering
Neela Nadarajan
Event planner
Wedding Reception Engagements
Birthday Parties Puberty Ceremony
Bharathanatya Arangetram Any other Occasions
416.844.3018
416.995.2059

JESEETHA JEGANATHAN
Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
www.jeseehomes.com
Century 21
People's Choice Realty Inc. Brokerage
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN, BA
Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
JEYSURESH JEGANATHAN
Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்...

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர், டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles, Yellow Building, 6055 Unit C-102
Scarborough, ON M1X 0A7 - Canada. 647 702 2159

வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
பந்தி நினைவரங்கத்தில்
ரிகை 10வது ஆண்டாக நடாத்தும்
ப்போசன விருந்தும் 2022
சுப்பர் சிங்கர் புகழ்
புண்யா
திரைப்பட பாடகர்
ிஹரசுதன்
ன்னிசை மாலை
அன்பளிப்பு:
ROUGH VVIP: $200, VIP: $100
https://eelanadu.ca/dinner-and-music/

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஈசன் கிருஷ்ணா
905-886-7399
SunLife Insurance

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance
Foresters

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

களுக்கு:
- 416.841.9600
டன் மண்டபத்திற்கு வரவும்.
:00 மணிக்கு ஆரம்பமாகும்.
க்கு நன்றிகள்

WEXFORD
WELLNESS CARE INC
✓ MASSAGE THERAPY
✓ PHYSIOTHERAPY
✓ ORTHOPAEDIC
✓ ACUPUNCTURE
✓ CHIROPRACTIC
✓ ORTHOTICS
301-240 Alton Towers Circle,
Toronto ON M1V 3Z3
647-349-5120
647-349-5121
wexfordclinic@gmail.com

மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்க்கெட்
இலங்கை, இந்திய மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough,
ON M1X 0C8
416 292 8585

KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE.E., UNIT #3,
SCARBOROUGH, ON M1J 2H4
Tel:416-269-7197

Proudly Canadian Since 1983
Jyothi
அன்றும் இன்றும் என்றும்..
Experience the Taste
ஜோதி தயாரிப்புக்களை கேட்டு வாங்குங்கள்
416.477.5345
www.jyothifoods.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

| வீடு | வாகனம் | மோட்டர் சைக்கிள் | படகு | கனரக வாகனம் |
|---|---|---|---|---|
| HOME | AUTO | MOTOR CYCLE | BOAT | TRAILER |

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**

# ஜெனிவாத் தீர்மானமும் தமிழ்நாடும்


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –




மற்றொரு ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்த நாடுகள் மற்றும் நடுநிலை வகித்த நாடுகள் போன்றவற்றை தொகுத்து பார்த்தால் ஒரு விடயம் தெளிவாக தெரியும்.

ஆதரித்த நாடுகள் தமிழர்களுக்காக அதை ஆதரித்தன என்பதை விடவும் தங்களுடைய பூகோள அரசியல் நோக்கு நிலைகளில் இருந்து தீர்மானத்தை அணுகியுள்ளன என்பது. இரண்டாவதாக தீர்மானத்தை எதிர்த்த நாடுகளை எடுத்துப் பார்த்தால் அவை பெருமளவுக்கு அமெரிக்க எதிர்ப்பு காரணமாக ஜெனிவா தீர்மானத்தை எதிர்த்திருக்கின்றன என்பது.

எனவே தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகள் தமிழர்களுக்கு எதிராக வாக்களித்தன என்பதை விடவும் அமெரிக்காவுக்கு எதிராக வாக்களித்தன என்பதே அதிகம் பொருத்தமான விளக்கம். மூன்றாவதாக நடுநிலை வகித்த நாடுகள். இந்நாடுகள் இலங்கை அரசாங்கத்தோடு தமக்குள்ள உறவை பகை நிலைக்குத் தள்ள விரும்பவில்லை. அல்லது அமெரிக்காவின் மேலாண்மையை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது தமிழ் மக்களை கையாளக்கூடிய தூரத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கருதும் நாடுகள்.

இந்தியா நடுநிலை வகித்திருக்கிறது. கடந்த ஆண்டும் இந்தியா நடுநிலை வகித்தது. இதுவரையிலுமான கடந்த பத்தாண்டுகால ஜெனிவா தீர்மானங்களில் இந்தியா இரண்டு தடவைகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது. இம்முறை ஜெனிவாவில் இந்தியாவை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தூண்டும் நோக்கத்தோடு தமிழகத்தில் உள்ள சில செயற்பாட்டாளர்கள் முயற்சித்தார்கள். யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு ஓர் அறிக்கையை வெளியிட்டது.அந்த அறிக்கையானது இலங்கை அரசாங்கத்தை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தது. இந்தியா ஐநாவில் அக்கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது. இது போன்ற கோரிக்கைகளை முன் வைத்து தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்கள் சிலர் அங்குள்ள ஈழத்தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்கூடாக இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கலாமா என்று முயன்றிருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவாளர்களான குளத்தூர் மணி போன்றவர்கள் கூட அந்த விடயத்தில் அதிகம் அக்கறை காட்டவில்லை என்று தெரிகிறது. புலம் பெயர்ந்த தமிழர்களோடு அதிகம் உறவைப் பேணும் சீமானின் கட்சியும் அதில் அக்கறை காட்டவில்லை. மேலும் பெரிய திராவிடக் கட்சிகளை அணுகிய பொழுது குறிப்பாக திமுக அந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. ஈழப் பிரச்சினையில் தலையிட்டு கையச் சுட்டுக் கொள்ள வேண்டாம் என்று திமுகவின் தலைமை தன் கட்சி ஆட்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு ஜெனிவா தீர்மானத்தை முன் வைத்து தமிழகத்தில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைக்க முடியாமல் போனமைக்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம், திமுக இந்த விடயத்தில் தலையிடுவதில்லை என்ற முடிவோடு காணப்படுகிறது. நெருக்கடியான காலத்தில் நிவாரணம் வழங்குவதற்கும் அப்பால் ஈழப்பிரச்சினையில் தலையிட திமுக தயங்குகிறது. அதனால் திமுக ஆதரவு நிலைப்பாட்டை கொண்ட ஈழ உணர்வாளர்கள் ஜெனிவாவை முன் வைத்துப் போராடத் தயாரில்லை.

இரண்டாவது காரணம் திராவிடம் எதிர் தமிழ் என்ற ஒரு முரண் நிலை ருவிற்றரிலும் கிளப் ஹவுஸ்சிலும் தீவிரமடைந்து வருகிறது. இதில் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கும் பங்குண்டு. இந்த முரண்பாடுகள் காரணமாக மேற்படி சமூகவலைத்தளங்களில் திமுக ஆதரவாளர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரும் மோசமாக மோதிக் கொள்கிறார்கள். இம்மோதல்களில் அனேகமாக அரசியல் நாகரீகம் பின்பற்றப்படுவதில்லை.

மூன்றாவது காரணம், சீமானின் நாம் தமிழர் கட்சி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஏகபோக உரித்தை கொண்டாட முற்படுகிறது. இதனாலும் ஏனைய கட்சிகள் அந்தப் பக்கம் வரத் தயங்குகின்றன. புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சீமானுக்கு ஆதரவான தரப்புக்களில் அநேகமானவை ஜெனிவாவை, ஜெனிவா தீர்மானங்களை பிரயோசனமற்றவை என்று கருதுகின்றன. அவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டு சீமானும் ஜெனிவாவை குறித்து அறிக்கை விடாமல் இருந்திருக்கலாம். மேலும், சீமான் தன் அரசியல் எதிரிகளைத் தாக்கும் பொழுது ஈழப் பிரச்சினையை ஒரு கேடயமாக பயன்படுத்துகின்றார். அதனால் அவருக்கு விழும் அடிகள் ஈழப் பிரச்சினையின் மீதும் விழுகின்றன.

நாலாவது காரணம், தமிழகத்தில் பாரதிய ஜனதா தன் கால்களை பலமாக ஊன்ற முயற்சிக்கின்றது. ஈழப்பிரச்சினையை அவர்கள் திமுகவுக்கு எதிராகவும் பயன்படுத்துகிறார்கள். தவிர திராவிடக் கட்சிகளை ஒதுக்கி விட்டு ஈழப் பிரச்சினையை தம் கையில் எடுக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஐந்தாவது காரணம், புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்புகளில் சிலவும் தாயகத்தில் உள்ள மிகச் சில தரப்புகளும் இந்துத்துவா ராஜதந்திரம் ஒன்றை கையில் எடுக்க முயற்சிக்கின்றன. அதன்படி தமிழக பாரதிய ஜனதாக்கட்சியின் முக்கியஸ்தர்களான திருமதி.வானதி சீனிவாசன்,அண்ணாமலை போன்றோரை அணுகுவதன்மூலம் டெல்லியை நெருங்கலாம் என்று அவர்கள் சிந்திக்கிறார்கள். இதுவும் திராவிடக் கட்சிகளை ஒதுங்கி நிற்க வைக்கிறது.

மேற்கண்ட காரணங்களை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும். தமிழகத்தின் கட்சி அரசியலுக்குள் ஈழத் தமிழர்களின் விவகாரம் சிக்கி விட்டது. இது தொடர்பாக உரையாடிய ஒரு தமிழகச் செயற்பாட்டாளர் பின்வரும் தொனிப்படச் சொன்னார் ஈழப்பிரச்சினையை தேர்தலுக்காகப் பயன்படுத்தும் ஒரு வழமைக்குப் பதிலாக தேர்தலை ஈழப் பிரச்சினைக்காக கையாளும் ஒரு வளர்ச்சி தமிழகத்தில் இன்றுவரை ஏற்படவில்லை. நீங்கள் ஈழத் தமிழர்கள் இந்தியாவை கையாள்வதற்குரிய ஒரு வெளியுறவு தரிசனத்தையும் கட்டமைப்பையும் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். அதற்கு முதலில் தமிழகத்தை கையாள்வதற்குரிய ஒரு வெளியுறவு கொள்கை அவசியம் என்று.

இவ்வாறான ஒரு அரசியல் சூழலில் மேற்சொன்ன தமிழக செயற்பாட்டாளர்களின் தூண்டுதலால் வைகோ ஒரு அறிக்கை விட்டார். பாட்டாளி மக்கள் கட்சியின் அன்புமணி ராமதாஸ் ஒரு அறிக்கை விட்டார். தமிழக சட்டமன்ற உறுப்பினரும், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவருமாகிய வேல்முருகன் ஓர் அறிக்கை விட்டார். அவ்வளவு தான் நடந்தது. ஆதற்குமப்பால் ஜெனிவா தீர்மானத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும் என்ற முனைப்போடு தமிழகக் கட்சிகளை நோக்கி உழைத்த செயல்பாட்டாளர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

அதேசமயம் தமிழகத்தில் உள்ள சில செயற்பாட்டாளர்கள் ஈழத் தமிழர்கள் மத்தியில் உள்ள சிவில் சமூகங்களை நெருங்கி ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூகங்களும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதே அது.

அதாவது ஜெனிவா தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றும் விதத்தில் இலங்கைத்தீவில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் சிவில் சமூகங்களும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி ஒரு வேண்டுகோளை விடுக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் தமிழ்க் கட்சிகளும் அதற்குத் தயாராக இருக்கவில்லை. சிவில் சமூகங்களும் உடன்படவில்லை. அதற்கு அவர்கள் வலிமையான ஒரு காரணத்தை முன் வைத்தார்கள். அது என்னவெனில், ஏற்கனவே கடந்த ஆண்டு ஆறு கட்சிகள் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கின்றன.

இக்கூட்டுக் கோரிக்கையை தயாரிக்கும் பொழுது தமிழரசுக் கட்சி அதில் முதலில் இணையவில்லை. அக்கட்சி அந்த முயற்சிகளில் இணைந்து செயல்பட்ட தொடங்கியபின் கோரிக்கையின் வடிவம் மாறியது. எனினும் மேற்படி கூட்டுக் கோரிக்கையானது சாராம்சத்தில் மாகாண சபையை கடக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தியது. இதில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிட்டுப் பூங்காவில் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது.

இவ்வாறு பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் ஆறு கட்சிகளும் ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியப் பிரதமரை நோக்கி முன்வைத்தன. ஆனால் இன்று வரை அந்த கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசாங்கம் பதில் கூறவில்லை. கடந்த ஆண்டு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்தார். இதன் போது அவர் கூட்டமைப்பை சந்தித்தார். டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார். ஆனால் ஆறு கட்சிகளையும் ஒன்றாகச் சந்திக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், மீண்டும் ஒரு தடவை இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைப்பதற்கு தமிழ்க் கட்சிகளும் தயாரில்லை குடிமக்கள் சமூகங்களும் தயாரில்லை.

ஆக மொத்தம் ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு ஈழத் தமிழர்கள் மத்தியிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை.

அவ்வாறு ஈழத்தமிழர்களும் தமிழகமும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதால் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாமா இல்லையா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க, இந்திய மத்திய அரசாங்கத்தை கையாளும் விடயத்தில், தமிழக ஈழத் தரப்புகள் ஒன்றிணைந்து செயல்படுவதில் உள்ள சிக்கல்களையும் ஏமாற்றகரமான இடைவெளிகளையும் மேற்படி முயற்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.


தமிழகம் கொந்தளித்தால் இந்திய மத்திய அரசாங்கத்தின்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என்ற ஓர் எடுகோளின் அடிப்படையில் மூத்த அரசறிவியலாளர் திருநாவுக்கரசு உபாயம் ஒன்றை முன்வைத்தார்.

அது நாலாங்கட்ட ஈழப்போரின் போது 2006 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சென்னையில் திறவுகோல் என்ற தலைப்பில் எழுதப்பட்ட அக் கட்டுரையில்

சென்னை - டில்லி - வொசிங்டன் ஆகிய மூன்றும் ஒரு கோட்டில் வரும் போது தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் கடந்த ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு சில செயற்பாட்டாளர்கள் தன்னார்வமாக முன்னெடுத்த நகர்வுகள் வெற்றி பெறாதது எதைக் காட்டுகிறது? தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலான பிணைப்பு ஒரு பேர பலமாக மாற்றப்படவில்லை என்பதையா?

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## 42வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சதாசிவம் சண்முகம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுன் றோட்டை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 42வது ஆண்டு நினைவு நாள் 22 ஒக்டோபர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சதாசிவம் சண்முகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அமராவதி சண்முகம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுண் றோட்டை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவுநாள் 23 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி அமராவதி சண்முகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முத்தர் இரத்தினம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்தர் இரத்தினம் அவர்களது 26வது ஆண்டு நினைவு நாள் 20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் முத்தர் இரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னையா அன்னம்மா

கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம் (ஸ்பீற் குயின்) அவர்களின் 29வது ஆண்டு நினைவு நாள் 22 ஒக்டோபர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினம் தம்பிமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 12வது ஆண்டு நினைவுநாள் 24 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# புதுடில்லியில் ஈழத் தமிழர் மாநாடு:

—— வானன்

## இலங்கை அரசுக்கு கடுமையான செய்தி!

35 வருடங்களுக்குப் பின்னர் புதுடில்லியில் ஈழத்தமிழர் விவகாரம் பற்றி 10 ஒக்டோபர் 2022 அன்று இந்திய அரசசார் முக்கியஸ்தர்களுடனான ஈழத்தமிழர் சந்திப்பும், நட்புறவு பேச்சுக்களும் முதற்கடவையாக இடம்பெற்றிருக்கிறது.

இது இன்றைய நாளில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. 1987 ஒக்டோபர் 10 இந்திய - இலங்கை ஒப்பந்தம் முறிவும், இந்திய அமைதிப் படையுடன் விடுதலைப் புலிகள் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட 35 ஆவது ஆண்டு நிறைவு நாளில் இருதரப்பும் கைகுலுக்கி புதிய நட்புறவு ஒன்றை வளர்க்க முற்பட்டுள்ளனர்.



### ஈழத் தமிழர்களின் அரசியல் மைல்கல்

இந்த நிகழ்வு சரி பிழைகளுக்கு அப்பால் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் மீண்டும் ஒருமுறை ஈழத் தமிழர் சார்ந்த விவகாரத்தில் டில்லியை மையப்படுத்திய ஈழத் தமிழர்களின் அரசியல் வழி அல்லது கதவு திறக்கப்பட்டிருப்பது ஒரு மைல்கல்தான்.

உலகளாவிய ரீதியில் 33 நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்பட தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவில் 1991 ஆம் ஆண்டில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய மண்ணில் எந்த செயற்பாட்டையும் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

ஈழத் தமிழர்களின் அண்டை நாடான இந்தியாவின் இத்தடையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகவும் பாரதூரமான பின்னடைவாகும். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தின் பேரழிவிக்கான காரணங்களில் இத்தடையும் ஒன்றாக அமைந்துவிட்டது.

**ஈழத் தமிழர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டை இந்திய காவல்துறையின் அனுமதியுடன் நடத்தியதன் மூலம் இலங்கை அரசுக்கு ஒரு கடுமையான செய்தியும் சொல்லப்பட்டுவிட்டது. இலங்கையை மீறி இந்தியா ஈழத் தமிழர் விவகாரங்களில் தலையிடுவதற்கு தயாராகிவிட்டது என்பதும் இந்திய அரசின் வெளிவிவகார விடயங்களில் மாற்றங்கள் ஏற்படப் போகின்றது என்பதுதான் அந்தச் செய்தி.**

### விடுதலைப் புலிகள் மீதான தடை

இந்தத் தடையானது விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது விதிக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும் "ஒரு செயல் அது தரவல்ல விளைவுகளின் அளவிலிருந்து தான் அச்செயல் பற்றி எடை போடப்பட வேண்டும்" என்பதைக் கருத்தில் கொண்டு நோக்கினால் விடுதலைப் புலிகள் மீதான இந்தியாவின் தடையானது உண்மையில் ஈழத் தமிழர் யாவரும் அந்தத் தடையின் கட்டுக்குள் அடங்கி அடக்கப்பட்டதாகவே நடைமுறையில் செயற்பட்டதைக் காணலாம்.

ஈழத்தமிழர், தமிழீழம், விடுதலைப் புலிகள், என்ற சொல்லாடல்களை பயன்படுத்தி இந்திய மண்ணில் மாநாடுகளையோ, கூட்டங்களையோ அல்லது பேச்சுக்களையோ சட்ட பூர்வமாக நடத்த முடியாத ஒரு இறுக்கமான சூழல் உருவாக்கப்பட்டிருந்தது. இங்கே பேச்சுக்கள் என்கின்றபோது பல்வேறுபட்ட தனிநபர்கள் பின்கதவாலும், மறைமுகமாகவும் இந்தியப் பிரதிநிதிகளுடன் பேசி இருக்கக் கூடும். ஆனால் பகிரங்கமாக ஒரு பொது மேடையில் பேசுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. இருந்ததும் கிடையாது என்பதுதான் உண்மை.



இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோச் பெர்னாண்டஸ் ஒருமுறை 13 நவம்பர் 2000 அன்று புதுடில்லியில் ஈழத்தமிழர் சார்ந்த ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி இருந்தார்.

அந்தக் கூட்டம் அன்றைய நாளில் இந்திய காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு மண்டபத்தில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு தடை விதிக்கப்பட்டது. இப்படி பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஒருவரால் கூட்டம் நடத்த முடியாத சூழல் ஏற்பட்ட போது தனது வீட்டுக்குள்ளேயே ஒரு கூட்டத்தை நடத்த வேண்டிய நெருக்கடிக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோச் பெர்னாண்டஸ் தள்ளப்பட்டார் என்பதிலிருந்து இந்தத் தடை எவ்வளவு இறுக்கமாகவும் வலிமையாகவும் இருந்தது என்பதனை புரிந்துகொள்ள முடியும்.



அவ்வாறே இந்த வருடம் 21 மே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கூட்டம் ஒன்று தமிழகத்தில் நடாத்தப்பட்ட போது அக்கூட்டம் நடத்துவதற்குதடை விதிக்கப்பட்டது மாத்திரமல்ல, கூட்டம் நடத்திய தமிழக அரசியல் பிரமுகர்கள் கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர். ஆனால் ஈழத் தமிழர்கள் யாரும் அங்கு கைது செய்யப்படவில்லை என்றாலும்கூட, கூட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த வருடம் கறுப்பு ஜூலையை முன்னிட்டு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் உட்பட்டோர் டில்லியில் ஈழத் தமிழர்களின் கறுப்பு நாளை நினைவு கூர்வதற்கு கருத்தரங்கு ஒன்றை 30-07-2022 அன்று நடத்த முற்பட்ட போது அந்த இனவழிப்பு நினைவு நாள் நிகழ்வு இந்திய காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு நிகழ்வு நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டது என்பதனை இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும்.

### ஈழத்தமிழர் மாநாடு

இத்தகைய பின்னணியில் இலங்கை அரசாங்கம் இந்திய மண்ணில் ஈழத் தமிழர்கள் சார்ந்த கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்த முடியாது என்ற நம்பிக்கையில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இருந்த நிலையில் இம்மாதம் ஒக்டோபர் 10ஆம் திகதி புதுடில்லியில் ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினை சார்ந்து ஒரு பொதுக் கூட்டத்தை ஈழத் தமிழர்கள் பல்வேறுபட்ட சாத்தியமான வழிகளை மிக நுணுக்கமாக கையாண்டு இன்றைய உலகளாவிய அரசியல் போக்கு மாற்றத்தினை கவனித்து அதற்கு ஏற்ற வகையில் இந்திய அரசின் அனுமதி பெற்று இந்த ஈழத்தமிழர் மாநாட்டினை டில்லியில் நடத்தி முடித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் புலம்பெயர் தமிழர்களையும் தாயகத் தமிழர்களையும் கலந்து கொள்ளும்படி மகாநாட்டு குழுவினரால் பகிரங்க அழைப்பும் விடப்பட்டது. உண்மையான இலட்சியப் பற்றுள்ள தமிழர் நலன் சார்ந்த நபர்களும் அமைப்புகளும் இந்த மகாநாட்டு அழைப்பின் பிரகாரம் டில்லியில் ஒரு மண்டபத்தில் ஒன்றுகூடி எந்த தடைகளும் இன்றி நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் இந்திய அரசு சார்ந்த பிரமுகர்களும் இந்திய அரசியலை நிர்ணயம் செய்கின்ற பல்வேறுப்பட்ட அழுக்க குழுக்களின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள் பலரும் கலந்து கொண்டு இந்திய முக்கிய பிரமுகர்களுடன் தமது நிலைப்பாடுகள் பற்றியும் எதிர்கால இந்து சமுத்திரம் பாதுகாப்பு பற்றியும் பேசினர் என்பதும் இங்கே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகும்.

இவ்வாறு ஈழத் தமிழர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டை இந்திய காவல் துறையின் அனுமதியுடன் நடத்தியதன் மூலம் இது வரை காலமும் சட்ட ரீதியாக இருந்து வந்த தடை என்கின்ற முறைமை இப்போது நடைமுறை ரீதியாக தளர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு நீதிமன்ற தீர்ப்பும், நடைமுறையும் சட்டத்துக்கு சமனானது. இப்போது இந்த மாநாடு நடைமுறை முன்னுதாரணமாகி விட்டது. எனவே இந்த முன்னுதாரணத்தை பின்பற்றி இனிவரும் காலத்தில் ஈழத் தமிழர் தரப்பில் யாராக இருந்தாலும் புதுடில்லியில் மாநாடுகளையும் கூட்டங்களையும் நடத்த முடியும் என்பது மகிழ்ச்சியான விடயம்தான்.

ஆகவே இனி வரும் காலங்கள் இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் தலைநகரங்களிலும் இத்தகைய கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்துவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

அதேவேளை, இலங்கை அரசுக்கு ஒரு கடுமையான செய்தியும் சொல்லப்பட்டுவிட்டது. இலங்கையை மீறி இந்தியா ஈழத் தமிழர் விவகாரங்களில் தலையிடுவதற்கு தயாராகிவிட்டது என்பதும் இந்திய அரசின் வெளிவிவகார விடயங்களில் மாற்றங்கள் ஏற்படப் போகின்றது என்பதுதான் அந்தச் செய்தி.


அத்தோடு இலங்கைக்கு எதிராக இந்திய மண்ணில் இருந்து ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கான வழி ஒன்று திறந்து விடப்பட்டுவிட்டது என்பதும் கவனத்திற்குரியது.

இத்தகையதொரு வாய்ப்பான மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு மேலும் பல்வேறு முன்னெடுப்புக்களை ஈழத்தமிழர் சார்ந்த பல்வேறு அமைப்புக்களும் சக்திகளும் மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது ஓர் அடைபட்ட கதவு அனைவர்க்கும் திறபட்ட மாதிரியானது.

# விலகிப் போகும் ஜப்பான்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -





இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, கடன் வழங்கிய நாடுகளுடன், கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாத தேவையாக மாறியிருக்கிறது.

இந்த நிலையில் இந்தியாவையும் சீனாவையும் சமாளித்தால் தான், அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க கூடிய நிலை காணப்படுகிறது.

ஜப்பானைக் கொண்டு, சர்வதேச கடன் வழங்குநர்களின் மாநாட்டைக் கூட்டுகின்ற முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

கொள்கை அளவில் ஜப்பான் இதற்குத் தயாராக இருப்பதாக கூறினாலும், அதிகாரபூர்வமாக அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, சர்வதேச கடன் வழங்குநர்களின் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்து, அதற்குத் தலைமை வகிக்க ஜப்பான் இணங்கியிருப்பதாக கூறியிருந்தார்.

அவர் அதனை அறிவித்த சில மணி நேரங்களிலேயே, டோக்கியோவில் இருந்து மறுப்பு வெளியானது.

இதுவரை அவ்வாறான எந்த இணக்கப் பாடும் ஏற்படவில்லை என்று ஜப்பான் அறிவித்தது. ஜப்பானின் இந்த அறிவிப்பை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இலங்கை விவகாரத்தில் ஜப்பான் அசட்டையாக இல்லை என்பதையே அது எடுத்துக் காட்டியது.

இலங்கையுடன் நீண்டகால நட்புறவைப் பேணி வருகின்ற நாடுகளில் ஒன்று ஜப்பான். பௌத்த மற்றும் கலாசார ரீதியான தொடர்புகளும், பிணைப்புகளும், இந்த உறவுகளை வலுப்படுத்தியிருந்தது. அத்துடன் இலங்கைக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட பெருமளவிலான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது ஜப்பான்.

இலங்கைக்கு குறைந்த வட்டியுடன் நீண்டகால சலுகைக் கடன்களை வழங்குகின்ற ஒரு நெருங்கிய பங்காளியாகவும் ஜப்பான் விளங்கி வந்தது. ஆனால், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் அண்மையில் சீர்குலைந்து போய் விட்டது.

அதற்கு முக்கியமான மூலகாரணம், சீனா. இரண்டாவது காரணம், ஆட்சியில் இருந்த கோட்டா அரசாங்கம்.

நல்லாட்சி அரசாங்கத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம், சர்வதேச சமூகத்தை கையாண்ட முறை, இலங்கையை பல நாடுகளில் இருந்து அந்நியப்படுத்தும் நிலைக்கு கொண்டு சென்று விட்டது.

சீனாவின் செல்லப்பிள்ளையாக நடந்து கொள்வதன் மூலம், சர்வதேச சவால்களைச் சமாளித்து விடலாம் என்ற கணிப்பில் கோட்டா அரசாங்கம் செயற்பட்டது.

சீனாவின் செல்வாக்கு அதிகரித்த அந்த நிலையானது, பிற நாடுகளுடனான உறவுகளை நேரடியாகப் பாதிக்கும் நிலையை ஏற்படுத்தியது.

குறிப்பாக, ஜப்பான், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடனான உறவுகளை இலங்கை கெடுத்துக் கொண்டது.

ஜப்பான், இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து 'குவாட்' அமைப்பாக செயற்படுகின்றன..

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் சவால்களை எதிர் கொள்வதற்கு இந்த நான்கு நாடுகளும் இணைந்து செயற்படுகின்றன. இது சீனாவுக்கு மிகவும் அச்சத்தையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ள ஒரு விடயம். இந்தக் கூட்டு இலங்கையில் செல்வாக்குப் பெறுவதையோ, செல்வாக்குச் செலுத்துவதையோ சீனா விரும்பவில்லை. அதனால், இலங்கையில் தனக்கு வசதியான அரசாங்கம் உருவாகிய போது, இந்த நாடுகளின் முக்கியமான திட்டங்களை ஓரம்கட்டுவதற்கு இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுத்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிதியத்திடம் இருந்து பெறும் 480 மில்லியன் டொலர்கள் கடனுதவியுடன், கொழும்பில் போக்குவரத்து சமிக்ஞை வலையமைப்பை உருவாக்குவது உள்ளிட்ட திட்டங்களைச் செயற்படுத்த செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு இரத்துச் செய்யப்பட்டது.

அது போன்றே கொழும்பில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், இலகு ரயில் திட்டத்தை செயற்படுத்துவதற்கு 1.5 பில்லியன் டொலர்கள் செலவிலான ஒரு திட்டமும் முன்வைக்கப்பட்டது.

அதற்கு மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் அனுமதியும் அளித்தது. அதை விட கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியா, ஜப்பானுடன் இணைந்து கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான உடன்பாடு ஒன்றிலும் இலங்கை கையெழுத்திட்டது.

இந்த மூன்று திட்டங்களும், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இரத்து செய்யப்பட்டன.

அவற்றில் இருந்து அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று 'குவாட்' பங்காளிகளும் வெளியேற்றப்பட்டனர். பின்னர் நெருக்கடி ஏற்பட்ட போது, இந்தியாவுடன் வேறு வழியின்றி சமரசம் செய்து கொண்ட இலங்கை அரசாங்கம், மேற்கு கொள்கலன் முனையத்தை அமைக்கும் பொறுப்பை இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கியது.

சீனாவின் பேச்சைக் கேட்டு, மூன்று 'குவாட்' பங்காளிகளையும் பகைத்துக் கொண்ட இலங்கை அரசாங்கம், இப்போது அதன் பலாபலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கு காரணமாக இருந்த கோட்டா அரசாங்கம் பதவியில் இருந்து விலகி விட்டாலும், ராஜபக்ஷவினரின் நிழல் அரசாங்கம் தான், இன்னமும் நீடிக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தவுடன், ஜப்பானுடனான உறவுகளை கெடுத்து விட்டார்கள், அதனைச் சீரமைப்பது கடினம் என்று கூறியிருந்தமை நினைவிருக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், ஜப்பான் மீண்டும் இலகு ரயில் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியான போது, அதனை ஜப்பானிய தூதரகம் மறுத்திருந்தது. ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை சீரமைப்பதும், ஜப்பானிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதும், இப்போது அரசாங்கத்துக்கு முக்கியமான சவால்களாக உள்ளன.

படுகொலை செய்யப்பட்ட ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச்சடங்கிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணம் மேற்கொண்டமைக்கு, அந்த நாட்டுடனும் ஷின்சோ அபேயுடனும் இருந்த நெருங்கிய நட்புறவு மாத்திரம் காரணம் அல்ல.

மீண்டும் ஜப்பானுடன் தொடர்புகளையும் உறவுகளையும் வலுப்படுத்திக் கொள்வதும் தான். அந்தப் பயணத்தின் போது ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிய பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

அந்தப் பேச்சுக்கள் இலங்கைக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பது, கடன் வழங்குநர்களின் மாநாட்டைக் கூட்டுவதற்கான அனுசரணையை பெற்றுக் கொள்வது, புதிய முதலீடுகளை பெறுவது போன்றவற்றையே மையப்படுத்தியிருந்தது.

ஆனாலும் ஜப்பானின் கோபத்தையோ, அது எடுத்த நிலைப்பாட்டையோ, ரணில் விக்கிரமசிங்கவின் பயணம் மாற்றியமைக்கத் தவறி விட்டது.

அதனால் தான், ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இணை அனுசரணை பற்றி அறிவித்தவுடன், ஜப்பானில் இருந்து மறுப்பு வெளியாகியிருக்கிறது.

அதற்காக ஜப்பான், இலங்கையிடம் இருந்து விலகிச் செல்ல முனைகிறது என்று அர்த்தமில்லை.

இலங்கை தொடர்பான ஜப்பானின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. அதனை ஜெனிவாவிலும் பார்க்க முடிந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், வழக்கமாக ஜப்பான், இலங்கைக்கு எதிராக வாக்களிப்பதில்லை. இந்த முறையும் கூட, ஜப்பான் வாக்களிக்காமலேயே இருந்தது.


ஆனால், இலங்கையிடம் இருந்து ஜப்பான் நிறையவே மாற்றங்களையும், நடவடிக்கைகளையும் எதிர்பார்க்கிறது.

நாட்டின் தற்போதைய நிலைமையில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்ற கேள்வி ஜப்பானுக்கு இருக்கிறது.

அதற்கு முக்கியமான காரணம், ஜனாதிபதி மாறியிருக்கிறாரே தவிர அரசாங்கம் மாறவில்லை. அதே அரசாங்கத்தின் அதே அமைச்சர்கள், அதேகொள்கையே பின்பற்றப்படுகிறது.

அரச முறைமை மாற்றம் செய்யப்படாமல்,(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியாவை நோக்கிச் செல்லுதல்?

இந்தியா ஒரு பிராந்திய சக்தி. ஈழத் தமிழர்களுக்கான உடனடி அயல்நாடு. இது ஒரு மாறாத, ஒரு போதும் மாற்றவே முடியாத பிராந்திய யதார்த்தமாகும். இந்தியா தொடர்பில் இந்தக் கட்டுரையாளர் பல்வேறு சந்தர்பங்களில் எழுதியிருக்கின்றார். ஆனாலும் இந்தியாவை புரிந்து கொள்வதில் எப்போதுமே ஒரு குழப்ப நிலை இருக்கவே செய்கின்றது.

இதற்கு என்ன காரணம்? பொதுவாகவே அரசியல் விவகாரங்களை எங்களின் விருப்பு வெறுப்புக்களிலிருந்து நோக்கக் கூடாது. மாறாக, யதார்த்தத்திலிருந்து நோக்க வேண்டும். குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலைவர், அப்துல்லா ஒச்சலான் கூறுவது போன்று 'நேற்றையவற்றுடன் இன்றையவற்றை ஒப்பிடுவதை விட, அது இன்றைப்படி ஒரு யதார்த்தமாக மாறியுள்ளது என்பதைப் பற்றியே நாம் பேச வேண்டும்' என்பார்.

சூழ்நிலைகள் மாறுகின்ற போது நமது பார்வைகளும் மாற வேண்டும். அணுகுமுறைகள் மாற வேண்டும். இல்லா விட்டால் எங்களால் ஒரு போதுமே முன்னோக்கி பயணிக்க முடியாது. யுத்தம் நிறைவுற்று கடந்த பன்னிரெண்டு வருடங்களாக தமிழ் தேசிய அரசியலால் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகள் பற்றிய விவாதங்கள், அவ்வப்போது கொழும்பிற்கு வந்து செல்லும் மேற்குலக ராஜதந்திரிகளுடனான தேனீர் சந்திப்புக்கள். இப்படித்தான் கடந்த பன்னிரெண்டு வருடங்கள் நகர்ந்திருக்கின்றன.

இந்த பின்புலத்தில் தான் இந்தியாவை நோக்கிச் செல்லுதல் என்னும் கோசம் மெதுவாக மீளவும் எட்டிப்பார்த்தது. மீளவும் செல்லுதல் என்று கூறும் போது, முன்னரும் நாம் சென்றவர்கள் என்பது தான் அதன் பொருளாகும். இந்தியா ஈழத் தமிழர் சார்பில் இராணுவத் தலையீட்டை செய்த நாடு. தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினையொன்று இருப்பதை இன்றும் ஏற்றுக் கொண்டிருக்கும் ஒரேயொரு நாடு.

இலங்கை தொடர்பான இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் தமிழர் விவகாரம் தவிர்க்க முடியாதது. எவ்வாறு அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமை என்பது பிரிக்க முடியாத விவகாரமோ, அவ்வாறு தான் இந்தியாவின் இலங்கை தொடர்பான அணுகுமுறையில் ஈழத் தமிழர் விவகாரமும் தவிர்க்க முடியாததாகும். இந்த அடிப்படையில் தான், இந்தியா தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்தி வருகின்றது. ஆனால் இதனை சிங்கள தேசியவாத தரப்புக்கள் விரும்பவில்லை.

51வது ஜெனிவா கூட்டத் தொடரின் போது இந்திய பிரதிநிதி வெளிப்படுத்தி கருத்துக்களை சிங்கள தேசியவாத தரப்புக்கள் கடுமையாக எதிர்க்கின்றன. ஆங்கிலத்தில் எழுதும் சிங்கள அரசியல் ஆய்வாளர் ஒருவர், இந்தியா எதிரியை மீளவும் உறுப்படுத்தியுள்ளதாக எழுதியிருக்கின்றார். தமிழர் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை, சிங்களவர்களுக்கு எதிரான ஒன்றாகவே, தென்னிலங்கை சிங்கள சக்திகள் நோக்குகின்றன.

ஏனெனில், சிங்கள தேசியவாத தரப்புக்களை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் அழிவோடு அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்து விட்டன. ஒரு பிரச்சினை முடிந்து விட்ட பின்னர், அது பற்றி பேசுவதற்கு எதுவுமில்லை என்பதே பொதுவான சிங்கள உளவியலாக இருக்கின்றது. இந்த நிலையில் தான், இந்தியா தொடர்ந்தும் ஈழத் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சினையொன்று இருப்பதை வலியுறுத்தி வருகின்றது. ஒரு வேளை இந்தியா தமிழர்களின் பிரச்சினையை முற்றிலுமாக கைவிடுமானால், தமிழர் பிரச்சினைக்கான சர்வதேச நியாயம் என்பது முற்றிலும் இல்லாமல் போய் விடும். இதனை தமிழ் தேசியம் பேசுவோர் எந்தளவு புரிந்து வைத்திருக்கின்றனர்?

தமிழ் தேசிய அரசியல் சூழலில் இடம் பெறும் விடயங்களை நோக்கினால் இந்தியா தொடர்பில் குழப்பமான புரிதல்களே பலரிடம் இருப்பதாக தெரிகின்றது. பெரும்பாண்மையான பிரிவினர் இந்தியாவின் தவிர்க்கவே முடியாத இடத்தை புரிந்து வைத்திருக்கின்றனர் ஆனால் விடயங்களை எவ்வாறு அணுகுவது என்பதில் அவர்கள் மத்தியில் குழப்பங்கள் உண்டு. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அணுகு



முறைகளை இதற்கான உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இரண்டாவது தரப்பினர் கடந்த காலத்தை — அதாவது இந்திய அமைதிப் படைகள் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களை முன்னிலைப்படுத்தி, இந்திய எதிர்ப்பை தமிழ் தேசிய அரசியலில் பாதுகாக்க விருப்பும் தரப்பினர். இன்று தமிழ் சூழலில் இந்திய எதிர்ப்பை முன்னிலைப்படுத்தும் பிரதான தரப்பினராக, கஜேந்திர குமார் தலைமையிலான, அகில இலங்கை தமிழ் காங்கிரஷை குறிப்பிடலாம் இந்திய அமைதிப் படைகளின் காலத்தில் இடம் பெற்ற இந்திய இராணுவ அத்துமீறல்களை சுட்டிக்காட்டி இந்திய இராணுவமும் இனப்படுகொலையில் ஈடுபட்டதான பிரச்சாரங்களை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினரே முன்னெடுத்து வருகின்றனர். ஒரு புறம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் தாம் கரிசனையாக இருப்பதாக கூறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ — மறுபுறம், இந்திய எதிர்ப்பு அரசியலை தமிழ் தேசியத்திற்குள் பேணிப்பாதுகாக்க முற்படுவதை எவ்வாறு புரிந்து கொள்வது?

தமிழர் பகுதியில், இந்தியா, ஒரு படைத்தளத்தை நிறுவினால் கூட அதில் தங்களுக்கு பிரச்சினையில்லை என்றும் கூட, கஜேந்திரகுமார் ஒரு முறை கூறியிருந்தார். இந்தக் கட்டுரையாளர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தொலைகாட்சி ஒன்றிற்காக மேற்கொண்ட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். ஒரு புறம் தாங்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்ல என்று கூற முற்படும் கஜேந்திரன்களோ, மறுபுறம் இந்தியாவிற்கு எதிரான வெகுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் முழு மூச்சாக செயலாற்றுகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர், இந்திய படைகளால் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறிய சிலர், யாழ்ப்பாண பிரம்படியில் ஒன்று கூடியிருந்தனர். இதிலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியோடு இணைந்து செயற்படுபவர்களே தெரிந்தனர். இதன் நோக்கம் என்ன? இந்தியாவும் இனப்படுகொலையில் ஈடுபட்டது என்பதை சொல்லுவதால் யாருக்கு நன்மை கிட்டும்? இதனால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போகும் நன்மை என்ன?

தமிழ் மக்கள் மத்தியில் இந்தியாவிற்கு எதிரான அப்பிராயங்களை பரப்புவது மறுபுறமாக யாருக்கு பயன்படும். அதனை யார் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பார்கள்? நிச்சயமாக சீனாவே இதனை பயன்படுத்திக் கொள்ளும். தமிழ் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை விதைக்கும் தரப்பினரும் இருக்கின்றனர் என்பதை சரியாக கணக்கும் போட்டே, சீனா வடக்கு கிழக்கில் ஆர்வம் காண்பித்து வருகின்றது.

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது, யாழ் பல்கலைக்கழகத்தின் விவகாரம் ஒன்றும் பேசு பொருளாக இருக்கின்றது. யாழ் பல்கலைக்கழகம் சீனாவின் பல்கலைக்கழகம் ஒன்றோடு உடன்பாடு செய்திருக்கின்றது. ஆரம்பத்தில் இதனை செய்யப் போவதில்லையென்று கூறி வந்த யாழ் பல்கலைக்கழக துனை வேந்தர், பின்னர் உடன்பாட்டில் கையெழுத்திட்டிருக்கின்றார். இதிலுள்ள சில பாதகமான விடயங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருந்த போதிலும் கூட, அவர் எதனையும் கருத்தில் கொள்ளவில்லை. இவ்வாறானதொரு பின் புலத்தில், இந்தியாவின் முன்னணி தொழில்நுட்ப பல்கலைக்கழங்களில் ஒன்றும், யாழ் பல்கலைக்கழக்கதோடு இணைந்து செயற்படுவதற்கான முன்மொழிவை முன்வைத்திருக்கின்றது.

இலங்கையின் இரண்டு முன்னணி பல்கலைக்கழங்களோடு இவ்வாறான உடன்பாட்டை செய்து கொள்ளவுள்ளதாக இந்திய தூதரகம் கூறியபோது, இரண்டு தென்பகுதி பல்கலைக்கழகங்களின் பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு வழங்கியிருக்கின்றது. ஆனால் ஒன்று உங்களுக்கு மற்றையது தமிழ் பகுதிகளில் இருக்கும் பல்கலைக்கழக்கத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்தியா குறிப்பிட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் குறித்த வாய்ப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் உடன்பாட்டில் உள்ள விடயங்கள் சிக்கலானதென்று கூறி, யாழ் பல்கலைக்கழக துனை வேந்தர் இதனை இழுத்தடிக்க முற்படுவதாக கூறப்படுகின்றது. சீனா விடயத்தை பெரிது படுத்தத் தேவையில்லை. ஏனெனில், உதவி கிடைக்கும் போது எடுத்துக் கொள்வதில் ஏன் தயங்க வேண்டும். ஒரு தரப்பினர் இவ்வாறு கூறுகின்றனர். அதனை இந்தக் கட்டுரையாளர் மறுக்கவில்லை ஆனால் கேள்வி அவ்வாறான உதவி இந்தியாவிடமிருந்து வருகின்ற போது அதனை ஏன் இழுத்தடிக்க வேண்டும். சீன பல்கலைக் கழகத்தோடு உடன்பாடு செய்ய முடியுமென்றால் ஏன் இந்திய பல்கலைக்கழக்கதோடு உடன்பாடு செய்வதற்கு தயக்கம் காண்பிக்க வேண்டும்? அவ்வாறாயின் யாழ் பல்கலைக்கழக துனை வேந்தரின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலோடு தொடர்புபட்டதா?

வடக்கு கிழக்கிற்குள் சீனா ஆர்வம் காண்பிப்பது அடிப்படையில் இந்தியாவை சீண்டும் செயற்பாடுகள் தான். சீனா தமிழ் மக்களின் நலன்கள் மீதான அக்கறையிலிருந்து தமிழர் பகுதிக்குள் வரவில்லை. சீனாவுடன் பணியாற்றலாம் என்று கருதுபவர்கள் இதனை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். மேலும் இந்தியாவையும் சீனாவையும் சம தூரத்தில் வைத்து கையாளப் போவதாக எவரேனும் நினைத்தால் அவர்கள் நல்ல மனநல மருத்துவரைத் தான் பார்க்க வேண்டும். ஏனெனில் தமிழ் சமூகம் அவ்வாறான ஆளுமையுள்ள சமூகமல்ல. கையறு நிலையிலிருக்கும் சமூக


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –




மொன்று, இருக்கின்ற ஓரளவான நட்பு சக்திகளையும் இழந்துவிடக் கூடாது. இந்த அடிப்படையில் அரசியலை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு வேளை சீனா அதன் அணுகுமுறையை மாற்றிக் கொண்டு, தமிழர்களின் அரசியல் நியாயத்தை ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால், அதன் பின்னர் இது பற்றி உரையாடலாம்.

இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்று ஒரு தரப்பினர் முயற்சிக்கின்ற போது, மறுபுறும் அதன் முக்கியத்துவத்தை மறுதலிக்கும் நோக்கிலான செயற்பாடுகளும், தொடர்கின்றன. இதனை சுட்டிக்காட்டும் நோக்கிலேயே சில விடயங்களை இங்கு பகிர்ந்திருந்தேன். இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றேன். இந்தியாவை தவிர்த்து செல்ல முடியுமென்பது, வேண்டுமானால் கனவில் சாத்தியப்படலாம். ஒரு போதும் நிஜத்தில் சாத்தியப்படாது. அதே வேளை இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்று சிந்திப்பவர்களும் முதலில் சில அடிப்படைகளை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்தியாவின் அறிவிக்கப்பட்ட நிலைப்பாடாக ஒன்று இருக்கின்ற போது, அதற்கு மாறான சுலோகங்களோடு இந்தியாவை நோக்கிச் செல்ல முடியாது. செல்லலாம் ஆனால் அதனால் பயனில்லை.

இது தொடர்பில் எனது முன்னைய கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். இந்தியாவின் தமிழர்கள் தொடர்பான வெளிவிவகார அணுகுமுறையானது, அன்றிலிருந்து இன்றுவரையில் ஒன்றுதான். அதாவது, பிளவுபடாத இலங்கைக்குள் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான அரசியல் தீர்வொன்றிற்கு தமிழ் மக்கள் உரித்துள்ளவர்கள். அந்தத் தீர்வு இந்தியாவை பொறுத்தவரையில், இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை முறைமையை அடிப்படையாகக் கொண்டது. இதனை புதுடில்லியில் மாநாடுகள் நடத்துவதன் மூலம் மாற்றியமைக்காலாம் என்று எவரேனும் நினைத்தால், அது அவர்களது பிரச்சினையாகும். எனவே புதுடில்லியை நோக்கிச் செல்ல வேண்டுமென்று எண்ணுபவர்கள் இந்திய அயலுறவுக் கொள்கையை புரிந்து கொண்டு, இந்தியா எதனை வலியுறுத்தி வருகின்றதோ, அதற்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே இந்தியாவிடம் செல்ல வேண்டும்.

ஒரு நாட்டின் வெளிவிவகார கொள்கையை பிறிதொருவர் மாற்றியமைக்க முடியாது. பலம்பொருந்திய நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கையானது, உலக அரசியல் மாற்றங்களால் மாற்றமடையுமே தவிர, வேறு எந்தவொரு நகர்வுகளாலும் நாடுகளின் வெளிவிவகார கொள்கை மாறுவதில்லை. வேணடுமனால், வெளிவிவகார அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

# தமிழகத்தில் வலுக்கும் பகுத்தறிவுக் கரங்கள்!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

தமிழக அரசியலில் வெற்றி நடைப் போட்டுக் கொண்டிருக்கும் 'திராவிட முறைமை' பாணியிலான அரசின் மீது எதிர்க்கட்சிகள் வழமையாக முன் வைக்கும் குற்றசாட்டுகளில் வாரிசு அரசியல் என்பதும் அதனை மெய்ப் பிப்பது போல் அண்மையில் நடை பெற்ற தி.மு.க.வின் பொதுக்குழுவில், அக்கட்சியின் மக்களவை உறுப்பின ரும், தி.மு.க. தலைவரின் சகோதரியு மான கனிமொழிக்கு கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டி ருக்கிறது.

இதன் மூலம் அக்கட்சி வாரிசு அரசியல்' குற்றச் சாட்டை தொடர்ந்து சுமக்கத் தயாராகி விட்டது. சிலர் இதையும் கடந்து, அக்கட்சியில் கடுமையாக உழைப்பவர்களுக்கும், பெண்களுக்கென ஒதுக்கப்படும் பதவிகளில் பெண்களை நியமிக்கும் உட்கட்சி ஜனநாயகமும் இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடை கின்றனர்.

தி.மு.க.விற்கு இரண்டாவது முறையாக தலைவராக தெரிவாகியிருக்கும் ஸ்டா லின் முன், அரசியல் ரீதியாக பல சவால் கள் காத்திருக்கின்றன. ஆளுநர் ஆர்.என்.ரவி திருக்குறளை பற்றி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், 'ஆன்மீகத்தின் ஆதாரமாக விளங்கும் திருக்குறள், சாதாரண வாழ்க்கை நெறி நூலாக மட்டுமே காட்சிப்படுத்தப்படு கிறது' என்றும், 'திருக்குறளில் ஆன்மீக அம்சங்கள் ஏராளமாக உள்ளன. அரசிய லுக்காக உண்மையை சொல்ல சிலர் மறுக்கின்றனர்' என்றும் எதிர்நிலை விமர்சனத்தை தொடர்ச்சியாக முன் வைத்து வருகிறார்.

இதற்கு தமிழறிஞர்கள் விளக்கமளிக்கை யில், '1938 ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் வீசிய ஆரிய, சனாதன, இந்தி மொழி புயல் களில் சிக்கி திருக்குறளும், தமிழ் மொழியும் மறைந்திருக்கும்.

ஆனால் மறையாமல், அதனை திராவிட சிந்தனையாளர்கள். திராவிடக் கொள்கை மீது பற்றுள்ள அரசியல்வாதிகள், தமிழ் மொழி அறிஞர்கள், திருக்குறள் கற்பிக் கும் உலக பொதுமறை அரசியலை உயிர்த்துணர்ந்த பகுத்தறிவுவாதிகள் என்று பலர் அரண் அமைத்தும், களம் கண்டும், போராடியும் பாதுகாத்தனர். ஆரிய கொள்கை மற்றும் ஆரியர்கள் முன்னிறுத்தும் சனாதன தர்மம் என்பது வேறு.

கீதை சொல்லும் அறம் வேறு. திருக் குறள் சொல்லும் அறம் வேறு. அர்த்த சாஸ்திரம் சொல்லும் பொருள் வேறு. திருக்குறள் சொல்லும் பொருள் வேறு. வாத்ஸாயனர் சொல்லும் இன்பம் வேறு. திருக்குறள் கற்பிக்கும் இன்பம் வேறு. இவற்றின் நுட்பமான வேறுபாடுகளை உணராமல், எல்லாம் ஒன்று என்று உணர்பவர்களுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் குறிப்பிடும் மேற்கோளான, 'வைதிக தர்மமும், பொதுமறை அற மும், ஒன்றென நினைப்பவர் அறிவின் முடவர்' என்பதனை நினைவூ ட்டுவ தாக குறிப்பிடுகின்றார்கள்.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்று முப்பாலுடன் முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டது. வீடு பேறு இல்லை என்று குறிப்பிடுகிறது. இதற்கு தவத்திட குன்றக்குடி அடிகளார் தெளி வான விளக்கத்தை அளித்திருக்கிறார். எனவே ஆளுநர் திருக்குறளை எம் முடைய தமிழறிஞர்கள் விவரித்திருக் கும் விவரங்களிலிருந்தும், குறிப்புகளி லிருந்தும் உணர்ந்து, புரிந்து கொண்டு பேச வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். வெளிநாட்டினரின் மொழி பெயர்ப்பை படித்துக் கொண்டு, திருக் குறளை தவறாக புரிந்து கொள்ள வேண்டாம் என்கிறார்கள்.

கடந்த 2ஆம் திகதி காந்தி ஜெயந்தி தினத்தன்று தமிழகத்தில் 50க்கும் மேற் பட்ட இடங்களில் ஆர்.எஸ்.எஸ். அமை ப்பினர் பேரணி நடத்த நீதிமன்றத்தை நாடினர். அவர்களுக்கு அனுமதி கிடை த்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மத, நல்லிணக்க மனித சங்கிலி அறப்போர் நடத்திட அனுமதி வேண் டும் எனக் கோரப்பட்டது.

இதனை விசாரித்த நீதிமன்றம், மனித சங்கிலி போராட்டத்தை நடத்த அனுமதி த்தது. இதனைத் தொடர்ந்து கடந்த 11ஆம் திகதி அன்று சென்னை உள்ளி



ட்ட தமிழகத்தின் 500க்கும் மேற்பட்ட இடங்களில் மதசார்பற்ற அரசியல் கட்சி கள் மற்றும் ஜனநாயக அமைப்புகளின் ஆதரவுடன் சமூக, மத, நல்லிணக்க மனித சங்கிலி அறப்போர் நடைபெற் றது.

இதில் சென்னையில் நடைபெற்ற மனித சங்கிலி திராவிடக் கட்சிகள் பங்கேற்ற போது, வெறுப்பு அரசியலை விதைக் கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டது. இந்த அறப்போரில் ஆளுங்கட்சி என்ப தால் தி.மு.க. பங்கு பற்றவில்லை. இருப்பினும் மறைமுகமான உதவிகளை செய்தது. இந்த அறப்போர், எதிர்பார்த் ததை விட அதிக அளவிலான மக்கள் பங்கு பற்றி வெற்றி பெறச்செய்தனர்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆறாம் திகதி அன்று தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்துவதற்கு ஆர்.எஸ்.எஸ் அமைப் பினர், காவல்துறையிடம் முறையான அனுமதியை இம்மாத இறுதிக்குள் பெறுவர் என்று அவதானிக்கப்படுகிறது. மேலும் தமிழக முழுவதும் ஆர்.எஸ். எஸ். அமைப்பில் உள்ள உறுப்பினர் களையும், அவர்களின் பயிற்சி பெறும் இடங்களையும் மாநில உளவுத்துறை யினர் உன்னிப்பாக கண்காணித்து வருகிறார்கள்.

இருப்பினும் கோயம்புத்தூரில் உள்ள மாநகராட்சி பாடசாலை ஒன்றில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் பயிற்சி பெற்ற காணொளி ஒன்று இணையத்தில் வெளியானது. இதனால் அரச இயந்திரம் தற்போது முழுமையாக முடிக்கி விடப்பட்டிருக்கிறது.

பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸின் அரசி யல் நடவடிக்கை தமிழகத்தில் தீவிர மானதற்கு வலிமையாக இருந்தும் ஒற்றுமையாக இல்லாத எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தான் முதன்மையான காரண மாகிறது.

விரைவில் தொடங்கவிருக்கும் 'சட்டப் பேரவை கூட்டத் தொடரில் அ.தி.மு.க. வின் சட்டப்பேரவை துணைத் தலை வராக இருக்கும் பன்னீர்செல்வத்தின் இருக்கையை மாற்றி அமைக்கா விட்டால், அ.தி.மு.க. சட்டப் பேரவை கூட்டத் தொடரை புறக்கணிக்கும்' என்று வாக்களித்த மக்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை, அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுசெயலாளரான எடப்பாடி பழனிச்சாமி மேற்கொண்டிரு க்கிறார்.

தற்போது அ.தி.மு.க. பலவீனமான நிலை யில் இருப்பதால், அக்கட்சியை எப்படி வலிமையான எதிர்க்கட்சியாக இயங்க வைப்பது என்ற திட்டத்தையும், திரா விட கட்சியான தி.மு.க. தான் தீர்மா னிக்க வேண்டியதிருக்கிறது.

தி.மு.க.விற்கு எதிரான நிலைப்பாடு தான் அ.தி.மு.க. என்றாலும் இன்று அ.தி.மு.க. வில் எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர், பன்னீர்செல்வம் தரப்பினர், சசிகலா ஆதரவாளர்கள், தினகரன் ஆதரவாளர் கள் என்று நான்காக பிரிந்து, வலிமை குன்றி இருக்கிறது.

இது தொடர்பாக அ.தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள் பேசுகையில், 'பெரும் பான்மையும், இரட்டை இலையும் எங்கு இருக்கிறதோ. அதுதான் அசலான அ.தி.மு.க. இந்தநிலை, தலைவர்கள் மறைந்த பிறகு உருவாகி இருக்கிறது.


இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொண் டால் கட்சியினர் அனைவரும் எடப்பாடி கே பழனிசாமியின் பின்னர் அணி திரள்வர். அதுவரை அ.தி.மு.க.வை பலவீனப்படுத்த தி.மு.க.வும், பா.ஜ.க.வும் முயற்சி செய்து கொண்டு தான் இருக் கும். ஆனால் அ.தி.மு.க. தொண்டர்கள் ஒருபோதும் தி.மு.க.வையோ, பா.ஜ.க. வையோ ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்'' என்று விவரிக்கிறார்கள்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நடத்தும் பேரணி எத்தகைய தாக்கத்தை ஏற்படு த்தினாலும், ஆளுநர் திருக்குறள் மற்றும் சனாதன தர்மம் குறித்து வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பேசினாலும், பா.ஜ.க., மத்திய விசாரணை அமைப்பு கள் மூலம் அச்சுறுத்தும் அரசியலை மேற்கொண்டாலும், தமிழக மண்ணில் மதரீதியிலான வெறுப்பரசியலுக்கு இட மில்லை என்பது உறுதியாக தெரிகிறது. எப்படியெனில், தி.மு.க. மாவட்டம் தோறும் திராவிடக் கொள்கைகள் தொடர்பாக பயிற்சி பாசறையை நடத் திக் கொண்டிருக்கிறது.

இதற்கு தி.மு.க.வினரைக் கடந்து, திரா விடக் கொள்கைகள் மீது ஆர்வமு டைய ஏனைய அரசியல் இயக்கங் களைக் சார்ந்த இளைய தலைமுறை யினரும் அதிகளவில் பங்குப ற்றி வரு வதால், தமிழகத்தில் பகுத்தறிவு கரங் களின் வலிமை அதிகரித்து வருகிறது என்பது ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மை.


ரொரன்ரோ பல்கலைக்கழக மாணவர்களின் கவனத்திற்கு!

## கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் புலமைப்பரிசில் அறிவித்தல்



கணித மேதையும், கணணித் தமிழ் எழுத்துக்களின் பிதாமகனும், ரொரன்ரோ பல்கலைக்கழக பேராசிரியராகவும் விளங்கிய அமரர் கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் அவர்கள் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள தகுதிபெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பின்வரும் தகைமைகளைக் கொண்ட மாணவர்கள் இப்புலமைப் பரிசிலிற்கு விண்ணப்பிக்கலாம்:

1. ரொரன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு கற்கை நெறியாகக் கொண்ட, தமிழ் சமுகத்தில் பொதுவேலைகளில் பங்குகொண்டவர்கள்
2. பல்கலைக்கழக படிப்புக்காக நிதித் தேவையில் உள்ளவர்கள்

## Dr. Sinnathurai Vijayakumar Scholarship

To be awarded to an undergraduate student based on financial need. Preference given to students studying Tamil studies at U of T or students who are active in Tamil communities.

Recipient must:
- be a Canadian citizen/permanent resident and resident of Ontario;
- be studying Tamil studies at UofT or students who are active in Tamil Communities;
- demonstrate both academic achievement and financial need.

**Deadline to Apply: 01-Nov-22**

**https://future.utoronto.ca/scholarships/dr-sinnathurai-vijayakumar-scholarship/**



# ஸ்ரீனி சுப்பிராவை பிரதேசசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுங்கள்

## – மார்க்கத்தில் எங்கள் எதிர்காலத்தை நாம் இணைந்தே உருவாக்குவோம் –

கனடா நாட்டின் உயர் பெறுமானத்துக்குரிய முன்னரங்க நகரங்களில் மார்க்கம் முதன்மையானது என்றே கூறலாம். மார்க்கம் ஆற்றல் மிக்க பல்வகைப் பண்பாட்டு மரபுகளைக் கொண்ட பல்லின மக்கள் கூடி வாழும் பெருநகரமாகும். இங்கு வாழும் மக்கள் அரசியல் செயற்பாடுகளிலும் பங்குகொள்ள வேண்டும். நாம் அரசுகளுக்கு ஆண்டுதோறும் வரி செலுத்துகின்றோம். அந்த வரிகளைப் பயனுள்ளதாக்க வேண்டுமெனில் அரசியலிலும் ஈடுபாடு கொள்ள வேண்டும். மார்க்கம் பகுதியில் வாழும் பல்வகை இன மக்களையும் ஒன்றிணைத்து வலுவான சமூகத்தளத்தை உருவாக்கும் நோக்கில் நான் பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றேன்.

எமது சுற்றாடலை மேம்படுத்துவதற்கும் வணிக வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் மருத்துவமனைகளில் காணப்படும் காத்திருப்புக் காலத்தைக் குறைப்பதற்கும் எமது வரிப்பணத்தை மிகச் சிறப்பாக நிர்வகித்து சுகாதார பாதுகாப்புக் கட்டமைப்பை உறுதி செய்வதற்கும் அனைவரும் பொருத்தமான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த பிரதிநிதிகள் தேவை. இவர்கள் மக்களுக்கான நிலையான வலுவான பொருளாதாரதளத்தை உருவாக்க வல்லவர்களாக இருக்க வேண்டும். இத்தகையோரே அரசுகளின் சேவைகளையும் மக்களையும் சிறப்பாக இணைக்க வல்லவர் ஆவர். நான் மக்களுக்கான தொரு தொண்டனாகக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசுகளின் சேவைகளுக்கும் மக்களுக்குமிடையே இணைப்புப் பாலமாக இயங்கி வருகின்றேன்.

என்னிடத்தே சமூகப்பணிகள் தொடர்பான நீண்ட வரலாறு உண்டு. கனடாவில் 93ம் ஆண்டிலேயே கலாபம் தொலைக்காட்சி வேவையை நடத்தி தமிழ்மக்களுக்கான ஊடகப் பணியாளனாக என் சேவையைத் தொடங்கிய நான், கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த அரசியலாளர்களைப் பதவிகளில் இருத்துவதற்காகப பாடுபட்டு வருகின்றேன். இதன் விளைவாகவே மாநகரம், மாகாணம், மைய அரசு என்ற நிர்வாக அரச அலகுகளில் சிறந்தவர்கள் மக்களின் பிரதிநிதியாக இயங்கி வருகின்றார்கள். சிறந்த சேவையாளர்களைத் தெரிவு செய்யும் நோக்கில் நான் சமூகத்தவரிடையே நிதி திரட்டும் பணிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன், அரச சேவைகள் மக்களைச் சென்றடைவதையும் உறுதி செய்துள்ளேன்.

கனடாவில் தமிழ் மக்களுக்காகத் தோன்றிய முதல் தொலைக்காட்சி ஊடகம் கலாபம். 1993இல் இதை உருவாக்கி நிர்வாகத் தயாரிப்பாளராக வெற்றிகரமாக நடத்தினேன். தமிழர் வணிகம் வளர்வதற்கு இத்தொலைக்காட்சி பேருதவி புரிந்தது. பல்வேறு இனங்களுக்காகத் தொலைக்காட்சி சேவைகளையும் உருவாக்கினேன். பல்வகை இனங்களின் கலை, பண்பாடு என்பவற்றை இந்த பன்முகப் பண்பாட்டுச் சூழலில் மேம்படுத்துவதற்காக நான் என்னுடைய நிபுணத்துவத்தையும் பரந்துபட்ட அனுபவத்தையும் பயன்படுத்தினேன். பன்முகப் பண்பாட்டுத்தளங்களைக் கொண்டிருக்கும் இனங்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று புரிந்து கொள்வதற்கான பாலமாகவும் இயங்கினேன். இப்போதும் இனங்கள் ஒவ்வொன்றும் ஒன்றிணைந்து வலுவான சமூகமான இயங்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். நான் சந்திக்கும் அனைவரினதும் நம்பிக்கைகளையும் உறுதிகளையும் நான் வெகுவாக மதிக்கின்றேன்.

**இக்கருத்துகளை நம்பிக்கையோடு வலியுறுத்தி வருகின்றேன்.**

நான் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடனும் இலாப நோக்கற்ற சமூகசேவை அமைப்புகளுடனும் இணைந்து கடும் உழைப்புடனும் சுறுசுறுப்புடனும் பணியாற்றி வருகின்றேன். வெறுமனே பேச்சளவில் இல்லாமல் அவர்களிடையே 'செயல் வீரன்' என்ற பெயரைப் பெற்றிருக்கின்றேன். நான் சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகக் கடினமாகக் குரல் கொடுத்து வந்திருக்கின்றேன். என் நேரம் உட்பட, என்னால் முடிந்த அனைத்தையும் இப் பணிகளுக்காகச் வழங்கியிருக்கின்றேன்.

நான் இப்போதும் பல தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் இலாபநோக்கற்ற அமைப்புகள் பலவற்றின் உறுப்பினராகவும் இயங்கி வருகின்றேன். பயன்கருதாத இவ்வகைத் தன்னார்வத் தொண்டுப்பணிகளில் ஈடுபடுவதில் நான் உள்ளம் நிறைவடைவதோடு பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

அன்பான உறவுகளே!

நானும் உங்கள் பிரதிநிதியாக மார்க்கம் மாநகரசபையில் இணைந்து செயலாற்ற இதுவே பொருத்தமான தருணம் எனக் கருதுகின்றேன். பொருளாதாரமும் வாழ்வும் பல சவால்களை எதிர்நோக்கியிருக்கும் இக்காலத்தில் சமூக மேன்மைக்காகப் போராடவல்ல உங்களுக்கு நெருக்கமான ஒருவரே உங்களுக்கான பிரதிநிதியாக முடியும். மார்க்கத்தில் மக்களோடு நெருங்கி பணியாற்றவல்ல கீழ்நிலை மக்கள் பிரதிநிதி தேவை. மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. இதுவே மாற்றத்திற்கான பொருத்தமான நேரம். என்னை மார்க்கம் பிரதேச சபை உறுப்பினராக தேர்வுசெய்து மிகச் சிறந்த சேவையை ஆற்றுவதற்கான ஒரு வாய்ப்பை எனக்கு தாருங்கள்.

**தற்போது நான் ஆற்றிவரும் பணிகள் சில:**

- **தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி** (CEO)
  Ceylon Broadcasting inc,(TVCEYLON & TV Kallapam) Kallapam TV production Inc. Tamil Cultural Television Network and South Asian Multicultural Association. 2022
- **சபை உறுப்பினர்** Federal and Provincial Conservative Party Riding association of Markham-Unionville and Markham-Thorn hill. 202
- **தலைவர்** - Tamil Canadian Conservative Association Canada .2022
- **உப தலைவர்** -"Human Endeavour"• Committed to social and economic change in York Region. 2022.
- **உப தலைவர்** - International Movement for Tamil Culture Canada.
- **இயக்குனர் குழு உறுப்பினர்** - Durham Manor, Ajax & Pickering, new business development.
- **இயக்குனர்** - Foundation & Fundraising Board - Humber River Hospital foundation
- board for Sri Lankan communities.
- **முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்** - Milliken Mills Lions Club - Markham, Ontario.
- **முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்** - Settlement Assistance & Family Support Service (SAFSS) Scarborough
- **முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்** - Canadian Tamil Chamber of Commerce.

ஸ்ரீனி சுப்பிரா, மார்க்கம் வாழ் மக்களைப் பாதிக்கக் கூடிய எவ்வகைச் சிக்கல்களையும் வெற்றிகரமாகக் கையாண்ட அனுபவமுள்ள ஒரு தொலைநோக்குடைய தலைவர் ஆவார். மார்க்கம் மாநகரத்தை வணிகத்துக்குரிய சிறந்த இடமாக மாற்றவும் நிலையான பொருளாதாரத் தளத்தை உருவாக்குவதிலும் உறுதியாக உள்ளார். குடியிருப்பாளர்களுக்கும் வணிக சமூகத்திற்கும் இடையே சிறப்பான புரிந்துணர்வை ஏற்படுத்தவல்லவராக இருக்கிறார்.

குழுச் செயற்பாட்டில் முழு நம்பிக்கை கொண்டவரான ஸ்ரீனி, மார்க்கம் பிரதேசசபை உறுப்பினராகத் தன்னைத் தெரிவு செய்யும்படியும் தன் அணியில் ஓரங்கமாக இணையும்படியும் உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இவர் பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவாரெனில் உயர்தர வாழ்க்கைத்தரத்துடன் கூடிய பாதுகாப்பான வாழிடமாக மார்க்கம் திகழ அர்ப்பணிப்புடன் செயற்படுவார்.

- மார்க்கம் வாழ் தமிழர்கள் –

ஸ்ரீனி சுப்பிரா, மார்க்கம் வாழ் மக்களைப் பாதிக்கக் கூடிய எவ்வகைச் சிக்கல்களையும் வெற்றிகரமாகக் கையாண்ட அனுபவமுள்ள ஒரு தொலைநோக்குடைய தலைவர் ஆவார். மார்க்கம் மாநகரத்தை வணிகத்துக்குரிய சிறந்த இடமாக மாற்றவும் நிலையான பொருளாதாரத் தளத்தை உருவாக்குவதிலும் உறுதியாக உள்ளார். குடியிருப்பாளர்களுக்கும் வணிக சமூகத்திற்கும் இடையே சிறப்பான புரிந்துணர்வை ஏற்படுத்தவல்லவராக இருக்கிறார்.

குழுச் செயற்பாட்டில் முழு நம்பிக்கை கொண்டவரான ஸ்ரீனி, மார்க்கம் பிரதேசசபை உறுப்பினராகத் தன்னைத் தெரிவு செய்யும்படியும் தன் அணியில் ஓரங்கமாக இணையும்படியும் உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இவர் பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவாரெனில் உயர்தர வாழ்க்கைத்தரத்துடன் கூடிய பாதுகாப்பான வாழிடமாக மார்க்கம் திகழ அர்ப்பணிப்புடன் செயற்படுவார்.

- மார்க்கம் வாழ் தமிழர்கள் –


தேர்தல் பணிகளை முன்னெடுக்கவும் பரப்புரைகளைச் செய்யவும் பொருளாதார உதவியும் தன்னார்வத் தொண்டர்களும் தேவை. இவர் அணியில் நீங்களும் ஓரங்கமாக விரும்பினல் 647-2934422 என்ற எண்ணில் அல்லது votesrini@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள்.

தேர்தல் பணிகளை முன்னெடுக்கவும் பரப்புரைகளைச் செய்யவும் பொருளாதார உதவியும் தன்னார்வத் தொண்டர்களும் தேவை. இவர் அணியில் நீங்களும் ஓரங்கமாக விரும்பினல் 647-2934422 என்ற எண்ணில் அல்லது votesrini@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள்.


**ஸ்ரீனியை (Srini) தேர்ந்தெடுப்பதன் வாயிலாக மார்க்கத்தில் எங்கள் சிறப்பான எதிகாலத்தை நாமே கட்டமைப்போம்!**

**facebook.comlvotesrini / twitter.comlvotesri / E: votesrini@gmail.com / www.srinisuppira**


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல், வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். உத்யோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சந்திக்க நேரிடும்.



ரிஷபராசி அன்பர்களே! அடுத்தவர் குற்றச் சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள்.வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது




மிதுனராசி அன்பர்களே! கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.




கடகராசி அன்பர்களே! பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பாராதசெலவு உண்டாகலாம். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். உத்யோகஸ்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. இயந்திரங்களில் பணிபுரிபவர்கள், ஆயுதங்களை கையாள்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம்.




சிம்மராசி அன்பர்களே! கோபமான பேச்சு, டென்ஷன் குறையும் வாரம். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கும். லாபம் கூடும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி அமைதியாவர்.



கன்னிராசி அன்பர்களே! வேலைபளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். கை, கால் வலி, உடல் சோர்வு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகத்தில் சக ஊழியர்கள், மேல திகாரிகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. சுமாரான வாரம்.




துலாம் ராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்யோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும்.




விருச்சிகராசி அன்பர்களே! காரியங்கள் தடைபட்டாலும் பின்னர் நன்றாக நடந்து முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு, கூடுதல் பொறு ப்புகள் உண்டாகலாம். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும்.






தனுராசி அன்பர்களே! தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும்.



மகரராசி அன்பர்களே! தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. குடும்பத்தினரின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தரும். தரும்.



கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். உத்யோகத்தில் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.



மீனராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும்.உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சரணடைந்து காணாமலாக்கப்பட்டோர்

(8ம் பக்கத் தொடர்ச்சி) எனவே முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இச்சம்பவங்கள் தொடர்பில் முக்கிய சில தரப்பினரால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் என்பன பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பதன் ஊடாகவே அவைகுறித்த உண்மையைக் கண்டறியமுடியும். அதனையே சர்வதேச சமூகமும் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துமாறு கோருகின்றது. அதனை நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினை என்ன? இருப்பினும் அரசியல் ரீதியிலான பக்கச்சார்பான தன்மையும், தமது வாக்கு வங்கியை உயர்த்திக்கொள்வதற்காக அதனைப் பயன்படுத்திக் கொள்வதும் அரசாங்கங்கள் அடைந்திருக்கும் தோல்விக்கான பிரதான காரணமாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30-1 தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்கள் எவையும் அத்தீர்மானத்திலிருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்ட கடந்த 2020 ஆம் ஆண்டு வரையான 5 வருடகாலத்தில் பெருமளவிற்கு நிறைவேற்றப்படவில்லை.

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் படுகொலைகளில் பலியானவர்கள் தொடர்பில் உண்மையை அறிவதற்கும், நீதியைப் பெறுவதற்குமான உரிமை அவர்களது உறவினர்களுக்கு இருப்பதைப்போன்று திருகோணமலை 5 மாணவர் விவகாரம், 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட விவகாரம் உள்ளிட்ட மேலும் பல சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட தரப்பினரின் உறவினர்களுக்கு இருக்கின்றது.சுமார் 12.000 முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அலி சப்ரி கூறுகின்றார். ஆனால் பாதுகாப்புப்படையினரின் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்ப்பட்டியலையே மக்கள் கோருகின்றார்கள். இவற்றுக்கிடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் புதிதாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதாக இருந்தால், அதனை பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவகையில் உரிய நியமங்களுக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படவேண்டியது அவசியமாகும். குறிப்பாக ஆணைக்குழுவிற்கான ஆணையாளர்களின் தெரிவு நியாயமான முறையில் இடம்பெறுவதுடன் அவர்கள் பாதிக்கப்பட்ட தரப்பினரின் உணர்வுகளையும் கடந்தகால நிகழ்வுகளையும் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அடுத்ததாக அந்த ஆணைக்குழுவானது தாம் அழைப்பதற்கு விரும்புபவர்களை அழைப்பதற்கும், முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான சுதந்திரம் உள்ளடங்கலாக நிதியியல் ரீதியிலான மற்றும் செயற்பாட்டு ரீதியிலான சுதந்திரத்தைக் கொண்டிருக்கவேண்டும்.

அடுத்ததாக புதிதாக உருவாக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எமது நாட்டின் பல்லினத்தன்மை, மொழி, கலாசார பாரம்பரியம், மக்களின் சிந்தனைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் உள்வாங்கி அதற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட வேண்டும். அத்தோடு அது பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதாகவும், அதன் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் அமையவேண்டும்.

மேலும் ஆணைக்குழு சட்டத்துறை சார்ந்தோர், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், புலம்பெயர்ந்தோர் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினருடன் கலந்துரையாடிச் செயற்படவேண்டியது அவசியமாகும். நிறைவாக இவ்வாறானதொரு ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதாயின் அதன்மூலம் தீர்வைப்பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அரசியல் ரீதியான எண்ணப்பாடு காணப்படவேண்டுமே தவிர, வெறுமனே வெளித்தரப்பினருக்குக் காண்பிப்பதற்கான ஓர் உத்தியாக அதனைப் பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தினர்.

# விலகிப் போகும் ஜப்பான்

(18ம் பக்கத் தொடர்ச்சி) சீரமைக்கப்படாமல், ஒழுங்குபடுத்தப்படாமல், இங்கு கொட்டப்படும் நிதி வீண் விரயமாகவே இருக்கும் என்கிறது ஜப்பான். அதனால் புதிய முதலீடுகள், கடன்களை வழங்குவதில் இருந்து விலகியிருக்கவே ஜப்பான் விரும்புகிறது. அதே வேளை, நெருக்கடி கால மனிதாபிமான உதவிகளை ஜப்பான் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

கடன் வழங்குநர்களுக்கான கூட்டத்தைக் கூட்டுவதற்குக் கூட ஜப்பான் பின்னடிக்கின்ற ஒரு நிலை காணப்படுகிறது என்றால், நிதியுதவி வழங்கும் விடயத்தில், அது எந்தளவுக்கு முன்னெச்சரிக்கையாக இருக்கும் என்பதை புரிந்து கொள்வது கடினமல்ல.

# விடுதலைப்புலிகளை நான் அழிக்கவில்லை

(6ம் பக்கத் தொடர்ச்சி) வேண்டும் குறிப்பாக வடமாகாணத்திற்கு. அதேவேளை தாய்மார் மனைவிமார் கணவன்மார் மகள்மார் உட்பட பலர் யுத்தத்தின் இறுதி தருணங்களில் தங்களின் அன்பு க்குரியவர்களிற்கு என்ன நடந்தது என்பதை அறிய ஆவலாக உள்ளனர். ஆகவே இலங்கை காணாமல் போனவர்கள் உயிரிழந்தவர்கள் குறித்து மேலதிக தகவல்களை வழங்க வேண்டும் ஆயுத மோதலின் போது காணாமல் போதல் உயிரிழப்பு என்பது சாத்தியமே. இலங்கை இது எவ்வாறு இடம்பெற்றது இடம் பெற்றிருக்கலாம் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

ஜனாதிபதி நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகளிற்கு தீர்வை காண்பது குறித்து உறுதியாகவுள்ளார் என்பதை நான் அறிவேன் அரசியல் அமைப்பு சீர் திருத்தங்களையும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்ததன் காரணமாகவே சர்வதேச சமூகம் உதவி வழங்க முன்வந்தது. என்னால் இலங்கையின் பொருளாதார சூ ழல் சவாலகள் குறித்து பேச முடியும், எதிர்காலத்திற்கான சாத்தியப்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்க முடியும் ஆனால் ஜெனீவா வர்ணனையாளராக மாறுவதற்கு நான் முயலவில்லை, அது நான் செய்ய விரும்பாத ஒன்று.

# தவறுக்கு வருந்துகின்றோம்!

25 செப்டம்பர் 2022 அன்று மஹாலய உபயமாக ஊரெழுவைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு நல்லையா திருமதி நல்லையா சிவபாக்கியவதி இணையரது நினைவாக அன்னார்களது குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. ஆனால் எமது கவனக் குறைவு காரணமாக பெயர் விபரங்கள் தவறுதலாக பதிவிடப்பட்டுள்ளது. இதனால் அன்னார்களது குடும்பத்தினருக்கு ஏற்பட்ட மனத்தாங்கலுக்கு வருந்துகின்றோம். - ஆசிரியர் -



உ
சுவசாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE



635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.com
Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## ஸ்கந்த ஷஷ்டி உற்சவ பெருவிழாவும் ஸ்கந்த மஹாயாகமும்

## 25.10.2022 செவ்வாய்க்கிழமை முதல் 31.10.2022 திங்கட்கிழமை வரை

கந்தன் மெய்யடியார்களே!

விரத வழிபாட்டிற்கே சிறப்பான ஆலயமாக விளங்கும் கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை முன்னிட்டு தனிப்பெரும் சன்னிதானமாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் கலியுக தமிழ் கந்தன் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கு 25.10.2022 செவ்வாய்க்கிழமை முதல் 31.10.2022 திங்கட்கிழமை வரை காலை, மாலை உற்சவமும், ஸ்கந்த மஹாயாகமும், தேர், சூரன்போர், தீர்த்தம், பாரணை பூஜை, திருக் கல்யாணம் என்பன மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. விரதத்தின் மேன்மையும், பக்தியும், நற்பலனையும் தரக்கூடிய ஸ்கந்த மஹாயாகம், திருவிழா காலங்களில் அடியார்கள் தவறாது வருகை தருவதுடன் முடிந்த உபயங்களை பொறுப்பேற்று நற்பலன் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



☞ விரதாதிகளுக்குப் பால், பழம் ஆலயத்தில் வழங்கப்படும்.
☞ மாலை 5.00 மணிமுதல் கந்தபுராணபடலம் வாசிப்பு நடைபெறும்.

## ஸ்கந்த ஷஷ்டி விரத கிரியை நிகழ்ச்சிகள்

| காலை | | | மாலை |
|---|---|---|---|
| 7.00 | மணி | ஆலயம் திறத்தல் | 5.00 மணி |
| 9.30 | மணி | 10 கும்ப அபிஷேகம் | 6.00 மணி |
| 10.15 | மணி | ஸ்கந்த மஹாயாகம் | 6.45 மணி |
| 11.00 | மணி | சிறப்புப் பூஜை, வசந்த மண்டப பூஜை | 7.30 மணி |
| 11.45 | மணி | முருகன் புறப்பாடு, யாக தரிசனம் | 8.15 மணி |
| 12.45 | மணி | பிரசாதம் வழங்குதல் | 9.00 மணி |

24.10.2022 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கணபதி ஹோமம் மாலை அனுக்ஜை, வாஸ்து சாந்தி, அங்குரார்பணம், கடஸ்தாபனம், யாகசாலை பிரவேசம், பூர்வாங்க பூஜை



## 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை
## காலை - தேர்த்திருவிழா மாலை - சூரன்போர் உற்சவம்

### தேர்த்திருவிழா நிகழ்ச்சி நிரல்

காலை 8.00 மணி - 108 சங்காபிஷேகம், காலை 9.00 மணி - சிறப்பு பூஜைகள், யாகம்
காலை 10.30 மணி - வசந்த மண்டப பூஜை நடைபெற்று,
காலை 11.00 மணிக்கு சண்முகநாதப் பெருமான் அழகிய சித்திரைத் தேரில் பவனி வரும் அருட்காட்சியும், பச்சை சாத்தி ரத அவரோகணம், பிராயசித்த அபிஷேகமும் நடைபெறும்.

### சிறப்புமிக்க சூரன் போர் உற்சவம்

30.10.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி முதல் 10 கும்ப அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று 7.00 மணிக்கு சூரன் போர் நடைபெறும். இரவு 8.30 மணிக்கு பிரயசித்த அபிஷேகம் நடைபெறும்.
அடியார்கள் காலை, மாலை பால்குட அபிஷேகம் செய்து கொள்ளலாம்.

### 31.10.2022 புதன்கிழமை காலை தீர்த்தம் - பாறணை

பாறணை அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று முருகப் பெருமான் புறப்பாட்டுடன் தீர்த்தத் திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும், பாறணை பூஜையும் நடைபெற்று விரத அன்னதானம் வழங்கப்படும்.

### 31.10.2022 புதன்கிழமை மாலை திருக்கல்யாணம்

31.10.2022 மாலை 5.00 மணிக்கு அபிஷேக பூஜைகள் நடைபெற்று, மாலை 7.00 மணிக்கு முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெறும்.

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate
• Business Law
• Immigration Law
• Family Law
• Last Wills
• Power of Attorney
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.